Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

குறைந்த செலவில்
வெண்மையான சலவைக்கு
மில்க் வைட்
நீல சோப்
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்:
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
527, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஆடி திங்கள் 17-ம் நாள் 2—8—1959 ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் பிறை 26 இதழ் 9

# 'சிங்கள பண்டித'ரான தமிழருக்கே பதவி உயர்வு இல்லை

## தகுதி வாய்ந்த சுப்பிரமணியம் இருக்க 'ஜூனியர்' குணரத்தின உயர்த்தப்பட்டார்

### பௌத்த சிங்களவராய் இருந்ததற்கும் உதவி மந்திரி மனைவிக்கு தபால் ஆபீஸ் தலைவி உத்தியோகம் கிடைக்க உதவியதற்கும் கைமேல் பலன்!

(சுதந்திரன் நிருபர்)

நிறைந்த சிங்கள அறிவும், நீண்ட காலச் சேவைத் தராதரமும் பதவி உயர்வுக்கான தகுதிகளும் வாய்ந்த மத்திய தபாற் கந்தோர் ஊழியர் (G. C. S.—Class 2) திரு சி. சுப்பிரமணியத்துக்கு பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை.

அவருக்கு 5 படிகள் கீழே இருந்து குறைந்த காலச்சேவை செய்த சிங்கள பௌத்தர் திரு வி. ஜே. சி. குணரத்தின உயர்த்தப்பட்டார். குருநாகல் எம். பியும் உதவி மந்திரியுமான திரு மொன்னுக்குளமையின் உறவினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்களம் படித்தால் அரசாங்க உத்தியோகம் கிடைத்துவிடும் என்றும் பதவி உயர்வுகள் அடையப் பெறலாம் என்றும் தப்பாக எண்ணி வந்த சில தமிழர்களுக்கு திரு சுப்பிரமணியத்தின் தேக்கமும் குணரத்தினவின் திடீர் பதவிஉயர்வும் திகைப்பை உண்டாக்கியிருக்கிறது என்று தெரிகிறது.

#### சிங்களத் தேர்ச்சி

திரு சுப்பிரமணியம் சிங்களத்தில் மிக்க தேர்ச்சி உடையவராவர். பிரதமர் பண்டாரநாயகா பேசும் கூட்டங்கள் பலவற்றிலும் அவரின் சிங்களப் பேச்சுக்களை இவர் தமிழில் மொழி பெயர்த்தும், தமிழ்ப் பேச்சாளர்களின் தமிழ்ப் பேச்சுக்களைச் சிங்களத்தில் சிறப்பாக மொழி பெயர்த்தும் பாராட்டுப் பெற்றிருக்கிறார். கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் வியாங்கொடை சைவ சன்மார்க்க சபையினரின் அழைப்பின் பேரில் அங்கு சென்று சொற்பொழிவாற்றிய பிரதமர் தமது பேச்சை தமிழிலும் தமிழரின் பேச்சுகளைச் சிங்களத்தில் மொழி பெயர்த்த திரு சுப்பிரமணியத்தை அங்குள்ளவர்களுக்கு பின்வருமாறு அறிமுகப்படுத்திவைத்தார்:

"இவர் ஒரு யாழ்ப்பாணத் தமிழர். ஆனால் சிங்களப் பண்டிதர்களுக்கே சிங்களம் கற்பிக்கும் ஆற்றல் இவரிடம் உண்டு."

#### ஏன் பதவி உயர்வு இல்லை?

பிரதமரே பாராட்டுமளவு சிங்கள அறிவும் பதவி உயர்வு பெறுவதற்கான பிற தகுதிகளும் இருந்தும் தமிழராக இருந்துவிட்ட காரணத்தாலேயே அவருக்கு உத்தியோக உயர்வு மறுக்கப்பட்டு விட்டது என்று மத்திய தபாற் கந்தோர் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

#### குணரத்தினவின் தகுதி

முறைப்படி திரு. சுப்பிரமணியத்துக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வு அந்த இலாகாவில் அவருக்குக் கீழ் குறைந்த காலம் சேவை செய்து வரும் 'ஜூனிய'ரான திரு வி. ஜே. சி. குணரத்தினவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. திரு. குணரத்தின ஒரு

(9ம் பக்கம் பார்க்க)


திரு. கு. வி செல்வத்துரை

## அனாதை இல்லம்கொழும்பில் சைவ மாணவருக்கு இல்லையே!

—:—:—:—:—

### விவேகானந்தசபை ஒன்றை அமைத்து தொண்டு செய்ய வேண்டும்

(சுதந்திரன் நிருபர்)

"திறமைசாலிகளான பல சைவத் தமிழ் அனாதை மாணவர்கள் கல்வி பெறுவதற்கு கொழும்பிலே வசதியில்லாமல் இருக்கிறது. கொழும்பு விவேகானந்த வித்தியாலயம் ஒரு அனாதை மாணவர் விடுதியை ஏற்படுத்தினால் அது பெரும் புண்ணியமாகவும், தமிழ் இனத்துக்குச் செய்யும் அருந் தொண்டாகவும் அமையும்"

இவ்வாறு கொழும்பு விவேகானந்தவித்தியாலயத்தில் கடந்த சுமார் 9 வருடங்களாகத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிவிட்டு இப்போது யாழ்ப்பாணம் மாறிச் செல்லும் திரு கு. வி. செல்வத்துரை, 'எதிர் காலத்தில் விவேகானந்த சபை கல்வித்துறையில் ஆற்ற வேண்டிய பணி' என்பதுபற்றிச் சுதந்திரன் நிருபருக்களித்த ஒரு பேட்டியின் போது குறிப்பிட்டார்.

அனாதைகள் விடுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டால் ஒவ்வொரு பிள்ளைக்கும் அரசாங்கம் வருடம் ரூ. 360 வீதம் மான்யம் தரும். 60 பிள்ளைகள் இருந்தால் வருடம் ஒன்றிற்கு சுமார் 22ஆயிரம் ரூபாய் கிடைக்கும். போதாத செலவுகளுக்கு தர்மசிந்தையுள்ள தமிழ்ப் பெருமக்கள் நிச்சயம் உதவுவார்கள்.

இந்த 60 பிள்ளைகளும் சபை வேலைகளையும், வித்தியாலய எடுபிடி வேலைகளையும் கவனித்துக்கொள்வார்கள். அவர்களுக்கு தையல், பின்னல், மின்சார வேலைகள், ரேடியோ திருத்தல் போன்ற கைத்தொழில் கல்வியும் அளித்தால் ஆதாயகரமான வருவாயும் அவர்களைக்கொண்டு சபை பெறக்கூடியதாகவிருக்கும்.

கொழும்பு விவேகானந்த சபை சைவத் தமிழ் அனாதை மாணவர் விடுதியொன்றை அமைக்க வேண்டும். சைவ மங்கையர் கழகத்தினர் சைவ மாணவ மகளிர் விடுதிச்சாலையொன்றை அமைக்க வேண்டும். இதர மதத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இருக்கும் இந்த வசதிகள் கொழும்பிலுள்ள சைவத் தமிழ் மாணவருக்கு இல்லாதிருப்பது பெருங் குறை. இக்குறை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று திரு கு. வி. செல்வத்துரை கூறி முடித்தார்.

## பாராளுமன்றக் கூட்டங்கள் நீண்டகாலம் ஒத்திபோடப்படலாம்

—○—

### எதிர்க்கட்சிகளின் உபத்திரவத்திலிருந்து தப்ப அரசாங்கத்தின் புது உபாயம்

[சுதந்திரன் நிருபர்]

இவ்வருட வரவு செலவுத் திட்டம் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் நீண்ட நெடுங்காலத்துக்கு பாராளுமன்றக் கூட்டங்களைக் கூட்டாமல் சபையை ஒத்திப்போடுவதற்கு அரசாங்கம் அந்தரங்கமாக ஆலோசித்து வருகிறதென்ற ஒரு செய்தி சுதந்திரனுக்குக் கிடைத்துள்ளது.

வருடா வருடம் பாராளுமன்றத் திறப்பு விழா நடைபெற்று வரவு செலவுத் திட்டமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் காலவரையறையின்றி பாராளுமன்றக் கூட்டங்களை ஒத்திப்போட சட்டப்படி இடமிருப்பதாகவும் இந்த வசதியைக் கையாள அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அடிக்கடி பாராளுமன்றக்

(9-ம் பக்கம் பார்க்க)

## இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!



ரிச்லெட்ஸ்
பெக்டோரல்
(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்குவரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுறை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,
170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

## குயுக்தி



ந. சிவபாதம், அச்சுவேலி.

கே: அரசியலில் தொண்டு என்ருல் என்ன?

ப: தொண்டு என்ருல் 'இன்கிரமெண்ட்' அதாவது சம்பள ஏற்றம் என்று பொருள். மாதம் 600 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த மூன்தபாவும், எதிர்மன்ன சிங்கமும் அமை மந்திரிகளாகி மாதம் 1000 ரூபா வாங்கிக்கொண்டு, தொகுதி மக்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே பதவி யேற்ருேம் என்று சொல்லுகிருர்கள் அல்லவா? வாழ்க நிந்தவூர் பட்டிருப்பு மக்களின் மதிநுகம். அடியோடு வாழ்க!

ஃ

இ. பொன்முடியன், பம்பலப்பிட்டி.

கே: நாகரிகம் மிஞ்சிய சில இளம் பெண்கள் தெருக்களிலும், களியாட்ட இடங்களிலும் பேயாகத் திரிவதேன்?

ப: அவர்கள் பின்னுல் சில 'யங்கி' வாலிபர்கள் நாயாகத் திரிவதால்!

ஃ

நா. இராமசாமி, அனலைதீவு.

கே: கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது அந்தக் காலம். இந்தக் காலம்.........

ப: தியேட்டர் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதாகும்'

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: தனிமை கசப்பாக இருப்பதேன்?

ப: உட்பார்வை இல்லாததால், இருந்தால், 'இனிது இனிது ஏகாந்தம் இனிது' என்ற ஔவை மொழி கற்கண்டாக இனிக்கும்.

கே: தாங்கள் சுவையுடன் ரசிப்பது எதை?

ப: புசிப்பதை!

ஃ

என். குணரத்தினம், கரவெட்டி

கே: அறணை கடித்தால் மரணம்" என்கிருர்களே, இது உண்மையா அன்றி மூடநம்பிக்கையா? அறணை கடித்து யாராவது மரணமாகியிருக்கிருர்களா?

ப: அறணை சாதாரணமாகக் கடிப்பதில்லை. கடித்தாலும் யாரும் மரணமாவதில்லை. இது ஒரு மூடநம்பிக்கை என்பதைவிடத் தவருன விளக்கம் என்றே கொள்ள வேண்டும். பழமொழி இங்கு சிதைந்துவிட்டது. சரியான வாக்கியம் 'அரனைக் கடித்தால் மரணம்' என்பதாகும். அரன் என்ருல் சிவபெருமான். சிவபெருமான் கழுத்தில் பாம்பை ஆபரணமாகப் பூண்டுள்ளவர் என்பது ஐதீகம், சிவபெருமான் பாம்பை ஆபரணமாகப் பூண்டிருக்கிருரே அந்தப் பாம்பு கடித்தால் அவர் மாண்டுவிடமாட்டாரா என்று அறியாத சிலர் கேட்கக்கூடும். அப்படிக் கேட்பவர்களுக்குத்தான் பதில் "அரனைக்கடித்தால் மரணம்" என்பது. பாம்பிடம் கொடிய விஷம் இருக்கலாம். அதைவிடக் கொடிய விஷம் அரனிடம் இருக்கிறது. அவர் ஆலகால விஷத்தையே உண்டு அங்கத்தில் அதைப் பொதிந்து வைத்திருப்பவரல்லவா? அப்படிப்பட்ட நீலகண்டனிடம் பாம்பு வாலாட்ட முடியுமா? எனவே விஷமிகளுக்கெல்லாம் விஷமி அந்த ஆலவாயப்பன் என்பதையே 'அரனைக் கடித்தால் மரணம்' என்ற பழமொழி கூறுகிறது. தவருன பழமொழியைப் பாடம் செய்து கொண்ட மனித அறணைகள் சில இருக்கின்றன. தாம் கடிப்பதன்மூலம் சிலரைச் சாக அடித்துவிடலாம் என்று அவை மனப்பால் குடிக்கின்றன. இந்த மனித அறணைகள் முசுறு என்ற செவ்வெறும்புக்குச் சமானமானவை. முசுறு கடித்தால் அதுதானே மாண்டு மடிகிறது.

ஃ

பி. எஸ். குருசாமி, அட்டன்.

கே: மந்திரி மரிக்கார் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிருர்?

ப: எலிப் பொறி என்ன செய்யும், யானையைப் பிடித்து விடுமா என்று எக்களித்துக் கொண்டிருக்கிருர்.

ஃ

கே. ராசு, பசறை.

கே: நான் ஒரு சிறந்த நடிகனுக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எங்கு பயிற்சி பெறலாம்?

ப: பாராளுமன்றத்தில்!

ஃ

யோ. மஸ்னட்வாஸ், ஏருவூர்.

கே: மலரை விட்டு வண்டு பறந்துவிட்டால்......?

ப: வண்டின் மேல் மலர் ஜீவனும்ச வழக்குப் போடப் போவதில்லை.

எச். ஜோன், நேரியகுளம்.

கே: தமிழ் அரசியல் வாதிகளில் நகைச் சுவையாகச் சொற்பொழிவாற்றக் கூடியவர்கள் யார்?

ப: திரு வி. ஏ. கந்தையா திரு கு. வன்னியசிங்கம், திரு கந்தையா பெண்பாலாரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கக் கூடியவர்.

ஃ

எஸ். எஸ். சிங்கம், திருமலை.

கே: அடுத்த வீட்டு மல்லிகைக்கும் அடுத்த வீட்டு மங்கைக்கும்என்னவித்தியாசம்?

ப: அடுத்த வீட்டு மல்லிகையை முகர்ந்தால் மனம் களிக்கும். அடுத்த வீட்டு மங்கையை முகர நினைத்தாலும் முதுகு புளிக்கும்.

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12

சரோஜினிதேவி, கொழும்பு.

கே: நான் என் காதலரை ஏமாற்றி விட்டேன். அதனுல் அவருக்கு ஏதாவது தீமை வருமா?

ப: நீ ஏமாற்றியிருந்தால் அவர் உன் காதலராகஇருக்க முடியாதே, அம்மா. பின் எதற்கு அவரைப்பற்றிய கவலை உனக்கு?

ஃ

மு. பொன்னம்பலம், இரத்தினபுரி.

கே: ஈழத்து சிறுகதை எழுத்தாளர்களில் கே.டானியலைத் தாங்கள் மறந்து விட்டது பெரும்அக்கிரமம், சார்!

ப: மறந்துவிடவில்லை. நான் குறிப்பிட்டது ஈழத்துச் சிறுகதைஎழுத்தாளர்களையல்ல. ஈழத்து சிறந்த சிறுகதை எழுத்தாளர்களையே நான் குறிப்பிட்டேன்.

கே: மந்திரி மரிக்கார் ஹுலா ஹூப் ஆடினுல் எப்படியிருக்கும்?

ப: 'வொண்டர்புள்'ளாயிருக்கும்!

ஃ

எஸ். பி. ஜோன் ஜோஸப், பருத்தித்துறை.

கே: 'மேசன்' (Mason) என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல் கிடையாது என்கிருன் என் நண்பன், இது சரியா?

ப: தமிழ்ச் சொல் கொத்தனுர் என்பது. குழைத்த மண்ணையும் சுண்ணத்தையும் கற்களுக்கிடையில் கொத்திச் செலுத்திக் கட்டடத்தை நிர்மாணிப்பவராகையால் இப் பெயர் காரணப் பெயராக ஏற்பட்டிருக்கலாம்.

ஃ

கே. சிமான்பிள்ளை, மட்டக்களப்பு

கே: தமிழகத்திலுள்ள மூன்று சிறந்த அரசியல் பேச்சாளர்களையும் மூன்று சிறந்த இலக்கியப் பேச்சாளர்களையும் திறமைப்படி வரிசைபடுத்திக் கூறுக.

ப: அரசியல் பேச்சாளர்கள்: 1. சி. என். அண்ணாத்துரை, 2. [illegible], 3. ம. பொ. சி. இலக்கியப் பேச்சாளர்கள்: 1. ஆர். பி. சேதுப்பிள்ளை, 2. கி. வா. ஜகந்நாதன், 3. ஜி. சுப்பிரமணியபிள்ளை.

ஃ

இஸ்ரேல், நோட்டன்பிரிட்ஜ்

கே: படத்தில் நடிக்கும் பாலையாவுக்கு எத்தனை குழந்தைகள்?

ப: ஏகப்பட்ட குழந்தைகள். அவர் மாம்பழ நாயுடுவாக வந்தபோதே ஒரு டஜனுக்கு மேல் பிறந்துவிட்டனவே.

ஃ

ரி. மரியதாஸ், செங்கலடி

கே: புதிய மந்திரி சபையைப்பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?

ப: முடியும். "ஒன்றும் புதுமை இல்லை" என்பதுதான் அது.

வை. கா. தளையசிங்கம், புங்குடுதீவு

கே: ஆசிரியர் சங்க ஊழல்களைச் சுதந்திரன் அம்பலமாக்குகிறதே, அதில் சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்களா?

ப: ஏன், அவர்கள்தான் சுதந்திரனுக்கு எதிராகப் பிட்டிசம் எழுதுகிருர்களே!

ஃ

சாரதி ராஜா, ஆரம்பதி

கே: எதிர்மன்ன சிங்கத்தின் தமிழ் பாதுகாப்பு முன்னணி இப்போ என்ன செய்கிறது?

ப: சிங்களப் பாதுகாப்புக்குப் பின்னணியில் நின்று உதவி புரிய வேண்டியிருப்பதால் தனது பெயரைச் சிங்களப் பாதுகாப்புப் பின்னணி யென்று மாற்றிக் கொள்வதற்காக அகில இலங்கை அடங்காப்பிடாரிகள் பின்னணியின் தலைவரான திரு சுந்தரலிங்கத்தாரிடம் அனுமதி கோரியிருக்கிறது.

ஃ

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி

கே: இலங்கையில் வெளியாகும் தனிப்பட்ட தமிழ் வாரப் பத்திரிகைகளில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகை எது?

ப: இதில் என்ன சந்தேகம் சுதந்திரன் ஒன்றேதான்!


## "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி (EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ரூப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

### "ஆஸ்த்மடிக்கா"

(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
(மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

### சுக ஆதார வைத்தியசாலை

MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கன்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


## கவிதை வேண்டும்

—ஈழவாணன்—

கோலக் கருங்குயில்கள், சோலைப் பசுந்தளிரில்
குந்தி இசைக்குதடி கானம்!—வண்டு
கூடிக் குடிக்குதடி தேனும்!—அடி
நீலக் கருங்கடலில் நீந்தும் கயல் விழியே!
நீயும் இசைத்திடடி கானம்!

கன்னல் சுவையூறும், கட்டி இதழூட்டும்
காதல் கவிதையினிப் போதும்!—இந்தக்
காலம் கடந்துவிடும் வேகம்!—அடி
வண்ணக் கலைகளுடன் வாழும் வளர் தமிழர்
வாழக் கவிதையடி வேணும்!

நல்ல தமிழ் மொழியை! நாளும் அழித்துவிட
நாட்டில் பெருகுதொரு கூட்டம்!—அது
நம்மைக்கெடுத்துவிடும் கோட்டம்!—அடி
சொல்லில் சுவை சேர்த்து, சொட்டும் அழகூட்டி
சொல்ல முடித்திடோர் பாட்டும்!

காட்டுத் தனத்துடனே! காட்டிக் கொடுக்குமொரு
கயமை நிறைந்துவிட்ட கூட்டம்!—இங்கு
கற்றவரென்றுவா லாட்டும்!—அதை
விட்டுத் துடைப்பமதால் விரட்டி அடித்திடநல்
வீரக் கவிதைபல வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை ஆசிரியர்:

# கு. வி. செல்வத்துரைக்கு பிரிவுபசார விருந்து

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு கு. வி. செல்வத்துரை தமது பிறந்தகமான புங்குடுதீவுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதை முன்னிட்டு வித்தியாலய ஆசிரியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்னுருக்கு நண்பகல் விருந்து உபசாரம் நடத்தினர்கள்.

### சிங்கம் பாராட்டு

வைபவத்துக்குத் தலைமை தாங்கிய பாடசாலையின் முன்னுள் முகாமைக்காரர் திரு. வி. பி. என். சிங்கம் திரு. செல்வத்துரையின் சேவையைப் பாராட்டிப் பேசும் போது பாடசாலையின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு திரு. செல்வத்துரையே பெரிதும் காரணமாய் இருந்தார் என்று கூறினர்.

திரு. செல்வத்துரை பதிலளித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:


"பாடசாலை பலரும் பெருமை கொள்ளும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்ருல் அதற்கு நான் மட்டும் பொறுப்பு அல்ல. உடன் ஆசிரியர்களின் ஒத்துழைப்பால்தான் அது சாத்தியமாயிற்று. அவர்களின் ஆதரவு இல்லாதிருப்பின் என்னல் ஒன்றும் செய்திருக்க முடியாது.

### பாடசாலை வளர்ச்சி

"நான் 9 வருஷங்களுக்கு முன் பதவி ஏற்ற சமயம் 7-ம் வகுப்போடு இருந்த பாடசாலை இன்று உயர் தரக் கல்லூரியாக மிக விரைவில் மிளிரப் போகும் நிலையில் உள்ளது. விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது. பட்டதாரி ஆசிரியை ஒருவர் விஞ்ஞானம் போதிக்க நியமிக்கப்பட்டிருக்கிருர். மொத்தம் 32 ஆசிரியர்கள் கடமை செய்கிருர்கள். 1,400 மாணவர்கள் வரை கல்விபயின்று வருகிருர்கள். பாடசாலையின் கல்வித் தரம் பெருமைக்குரியதாய் இருப்பதை வருடாந்தப் பொதுப் பரீட்சைச் சித்திகள் எடுத்துக் காட்டுகின்றன.

### பெருமைக்கு உரியவர்கள்

"இந்த நிலை ஏற்பட பாடசாலை முகாமைக்காரரும், பிள்ளைகளின் பெற்ருேரும் விவேகானந்த சபையாரும் விசேஷமாக எனது உடன் ஆசிரியர்களும் காரணகர்த்தர்களாய் இருந்தார்கள். அவர்களுக்குத்தான் பெருமையெல்லாம் போய்ச் சேர வேண்டும். எனக்கு அல்ல."- இப்படித் திரு செல்வத்துரை கூறினர்.



கொழும்பு விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு கு. வி. செல்வத்துரைக்கு பாடசாலை ஆசிரியர்கள் அளித்த பிரிவுபசார விருந்தின் போது எடுத்த படம்.

படம்: கே. சுப்பிரமணியம்

### பேச்சாளர்கள்

திருவாளர்கள் வி. ஏ. கந்தையா எம். பி., கி. லக்ஷ்மணன், சரவணமுத்து, வித்தியாதரிசி திரு. மாணிக்கவாசகர், எஸ். டி. சிவநாயகம், வித்தியால உதவித் தலைமை ஆசிரியர் நடராஜா, கனகரத்தினம் முதலாஞேரும் திரு. செல்வத்துரையின் சேவை நலம், நிர்வாகத் திறமை, குண விசேடம், தமிழ்ப் புலமை, பேச்சுத் திறன் உள்ளத் திண்மை- இவற்றை வியந்து பாராட்டிப் பேசினர்கள்.

### ஹாஸ்யக் குண்டுகள்

விருந்தில் ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், பத்திரிகைக் காரர்கள் முதலான பல்துறைப் பிரமுகர்கள் இருபாலாரும் சுமார் 200 பேர் வரை கலந்து கொண்டார்கள். அத்தனைபேருக்கும் வித்தியாலய ஆசிரியைகள் மனம் வைத்து தயாரித்து அளித்த இனிய 'தமிழ் உண'வை உவந்து உண்ட களைதிரப் பேச்சாளர்கள் 'ஹாஸ்யக் குண்டு'களைப் போட்டார்கள். ரஸிக்க முடிந்தவர்களும் சிரிக்கத் தெரிந்தவர்களும் தப்பிப் பிழைத்தார்கள்.

### பொதுக்கூட்டம்

நண்பகல் விருந்துக்குப் பின்னர் மாலையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. திரு. வி. பி. என். சிங்கம், பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா உட்படப் பலர் திரு. செல்வத்துரையைப் பாராட்டிப் பேசினர்கள். விருந்திலும் கூட்டத்திலும் திருமதி பரிமளம் செல்வத்துரை, செல்வன் செல்வத்துரை ஆகியோரும் பிரசன்னமாயிருந்தார்கள்.

### சபை விருந்து

புதன்கிழமையன்று திரு கு. வி. செல்வத்துரைக்கு கொழும்பு விவேகானந்த சபை ஒரு தேனீர் விருந்து நடத்தியது. அதில் பல பிரமுகர்கள் திரு செல்வத்துரைக்கு தமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். விவேகானந்த சபை திரு செல்வத்துரைக்கும் அவரது பாரியாருக்கும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கியது.

மறுதினம் தமது நண்பர்களுக்கெல்லாம் திருவாளர் செல்வத்துரையும் திருமதி செல்வத்துரையும் ஒரு விருந்து நடத்தினர்கள்.

### சிலோன் பெனிபிட் பண்ட்ஸார் விருந்து

திரு செல்வத்துரையின், சிலோன் பெனிபிட்பண்ட்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தின் கொழும்பு தலைமை நிலையத்தைச் சேர்ந்த நண்பர்களும் அவருக்கு சிறப்பானதோர் விருந்து நடத்தினர்கள்.

இவை தவிர வேறு தனிப்பட்டவர்களும் திரு செல்வத்துரைக்கு விருந்து கொடுத்ததாகத் தெரிய வருகிறது.

## கடவுளுக்கு கடிதம்

தேவாதி தேவனே! இற்றைக்கு ஏறக்குறைய முன்னூற்றிச்சொச்ச நாட்களுகு முன்னர் இங்கு அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம் செய்தனர். முடிவில், 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடியுங்கள்' என்ற தோரணையில் 'நாங்கள் கேட்டவை வேண்டாம். வேலை நிறுத்தம் செய்த தினங்களுக்கு சம்பளம் தந்தாலே போதும்' என்றவாறு கேட்டார்கள்.

அதேபோல, உடும்பு வேண்டாம் கை வந்தால் போதும் என்ற நிலையில் சமீபத்திய வேலை நிறுத்தமும் கைவிடப்பட்டது. "கையும் வரமாட்டாதுபோலிருக்கிறது" என்று ஒரு வர்த்தக ஊழியர் என்னிடம் கூறினர்.

கூறினரோ இல்லையோ, 'இனிமேல் இலங்கையில் வேலை நிறுத்தத்தை யாராவது நினைப்பார்களா?' என்று மீசையில் கையை வைத்து முறைக்கிருர் விஸ்வாமித்திரர். அதற்கு நான் என்ன சுவாமி செய்வது? என்னைப் பற்றி அவருக்குக் கொஞ்சம் எழுதுங்கள்.

பூவுலகத்தில் மானிடர் ஈரேழு பதினுன்கு உலகம் என்று பேசிக்கொள்கிருர்களே, அவை எவையெவை என்று அறிந்து எழுதும்படி பணித்தீர்கள். முயன்று பார்த்தேன். கிடைத்த விடை இதுதான்: அரசியல் உலகம், தொழிலாளர் உலகம், முதலாளி உலகம், பிரமச்சாரி உலகம், விபச்சார உலகம், காதல் உலகம், எழுத்தாளர் உலகம், பத்திரிகையுலகம், சினிமா உலகம், சமய உலகம், இலக்கிய உலகம், விஞ்ஞான உலகம், நாகரிக உலகம், பிச்சைக்கார உலகம் என்னும் பதினுன்குமாம். இவை தவிர, நீள அகலம் காண முடியாத பெண்ணுலகம், மதிப்பு வாய்ந்த ஆசிரியர் உலகம் இரண்டையும் சேர்த்து ஈரெட்டுப் பதினுறு உலகம் என்று கொள்வாரும் உளர்;


நிற்க, சமீபத்தில் குறிப்பிடக்கூடிய எந்தப் பிரமுகரும் இங்கு இறக்குமதியாகவில்லை. அதனுல் இலங்கை அரசாங்கம் தனது அலங்கார அணிவகுப்பைக் காட்டி யாரையும் வரவேற்கவில்லை. அதனுல் யாரும் [illegible]டங்கள் போட்டுக் கொடு[illegible] முழக்கவில்லை. எனவே இங்கு எந்தப் பத்திரிகையும் விளம்பர அனுபந்தம் வெளியிடவில்லை.

அதனுல் என்ன கெட்டது? இன்னும் சில தினங்களில் யாழ்ப்பாணத்து முக்கிய இந்து ஆலயங்கள் அடுத்தடுத்துக் கொடியேறப் போகின்றன. விஷயத்தை நான் வெட்ட வெளிச்சமாகச் சொல்ல வந்தால், முடி(வு)யாது?

29-7-59. நாரதர்.


வாங்குங்கள்

மௌலானு சாரங்களை




"இவற்றிற்கு உத்தரவாதமுள்ளவை."
"மௌலானு" சாரங்கள் அரை நூற்றுண்டாக ஒப்பற்ற உன்னத ஸ்தானத்தை நிலைநிறுத்திக்கொண்டே வருகின்றன.

மௌலானு (சிலோன்) லிமிட்டெட்,

கொழும்பு அன்ட் கண்டி.

MOULANA (CEYLON) LTD.
COLOMBO AND KANDY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக் கடிதம்

## கேரளத்தில்

—சென்னை ஜூலை 29

சென்னையில் வெளியாகும் எந்தத் தினப் பத்திரிகையிலும் கேரள நிலைமை பற்றித்தான் பத்தி பத்தியாக வெளியிடப்படுகிறது. கேரளத்தில் இவ்வாரமோ அல்லது மறு வாரமோ ஜனதிபதி ஆட்சி ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. மத்திய அரசாங்கம் கேரள விவகாரத்தைத் தீர்த்து வைக்கு முகமாகத் துணிந்து பிரதேச ஆட்சிப் பொறுப்பில் கை வைக்கத் துடித்துக்கொண்டிருக்கிறது.

கேரள கொம்யூனிஸ்டு அரசாங்கமும் தீவிரமாகி வரும் கிளர்ச்சிக்குப் பலியாகி வெளியேறுவதை விட மத்திய சர்க்காரிடம் இப்போதே பொறுப்பை ஒப்படைத்து விடுவது 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்று சொல்லிக் கொள்வதற்காவது பயன்படும் என்று கருதுவதாகத் தெரிகிறது.

## பாடப் புத்தகங்கள்

சென்னையைப்பொறுத்த வரையில் கார்ப்பரேஷன் நடத்தும் பள்ளிகளின் பாடப் புத்தகங்கள் சம்பந்தமான பிரச்னை சிறிது காலமாகத் தலை தூக்கி இருந்துவிட்டு இப்போது சுமுகமாகத் தீர்ந்துபோய் விட்டது.

## பங்கிங்காம் கால்வாய்

சென்னையிலுள்ள பக்கிங்காம் கால்வாய் விஷயத்தில் டில்லி அரசாங்கம் பட்டை நாமம் சாத்தி விட்ட துரோகம் தமிழர் நெஞ்சத்தை விட்டு இன்னும் நீங்கவில்லை.

80 வருஷங்களுக்கு முன்னர் வெட்டப்பட்ட இந்தக் கால்வாய்(நீளம் 261 மைல்) ஆந்திராவுக்கும் சென்னைக்கும் ஒருங்கே பயன்படுவதாகும். சென்னைத் துறைமுகத்துடன் இதை இணைத்துவிட்டால் இது போன்றதொரு

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

சிறந்த கால்வாய் இந்தியாவில் வேறு இல்லை என்றே சொல்லிவிடலாம். இதில் இப்போது தண்ணீர் ஓட்டம் இல்லாமல்தேங்கி நிற்கிறது. ஆகவே துர்நாற்றம் வீசுகிறது. சென்னை நகர மக்களின் சுகாதாரத்துக்கு கேடு விளைக்கிறது.

இந்தக் கால்வாயை ஆழமாக்கி, கரையும் அமைத்து கடலோடு சேர்த்து நீரோடத்துக்கும் போக்குவரத்துக்கும் வசதி செய்ய வேண்டும் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் திட்டம் போட்டார்கள். ஆனல் செயல்படவில்லை.

சமீபத்தில் இந்திய கால்வாய்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க டில்லி அரசாங்கத்தால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு பக்கிங்காம் கால்வாய் திட்டம் தேவையற்றது என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டது. அதனல் திட்டம் கைவிடப்பட்டது. தமிழ் நாட்டுக்கு டில்லி அரசாங்கம் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாத்திய பட்டை நாமம் இது என்று தமிழர்கள் வேதனை அடைகிருர்கள்.

## எதிர்கட்சிக்கு ஏச்சு

சென்னை ஆட்சியாளர்களோ வேறு திசையில் தமது கவனத்தைச் செலுத்தி வருகிருர்கள். எந்தப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தாலும் தி. மு. கழகத்தை அவர்கள் திட்டிய செய்திகள் கொட்டை எழுத்துக்களில் காணப்படும். கால்வாய்த் திட்டம் கை நழுவிப் போக விட்டவர்கள் எதிர்க்கட்சியைத் திட்டுவதில் தமது சூரத்தனத்தைக் காட்டிவருகிருர்கள்.

## சுதந்திரக் கட்சி

சுதந்திரக் கட்சிக்கு ராஜாஜி ஆங்காங்கே ஆதரவு திரட்ட முயன்று வரும் செய்திகளும் அனேகமாக எல்லாத் தினசரிகளிலும் இடம் பெறுகின்றன. சென்னை சட்டசபைத் தேர்தலின் போது "காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி" என்ற பெயரோடு முளைத்து பின்னர், ஜனநாயக காங்கிரஸ் என்று பெயரை மாற்றிக் கொண்ட கட்சி இப்போது அதன் சூத்திரதாரியான ராஜாஜியின் சுதந்திரக் கட்சியோடு இரண்டறக் கலந்து விட்டது.

## பெரியார் சுகவீனம்

இன்னுமொரு செய்தி ஈ. வெ. ராமசாமி பெரியாருக்கு நோய் கண்டுவிட்டது. நெஞ்சுவலி காரணமாக அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகிருர்.

---

# இரா அதிமணி தலைமையில் அசல்இ.தி.மு.க. இயங்குகிறது

# அதையே அறிஞர் அண்ணு என். வி. நடராஜன் போன்ருர் ஆதரிப்பதாகத் தகவல்

"தமிழ்நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினர்—அறிஞர் அண்ணு,துணைப் பொதுச் செயலாளர் திரு என். வி. நடராசன்போன்ருர் இலங்கையில் திரு இரா. அதிமணியைப் பொதுச் செயலாளராகக்கொண்டு இயங்கிவரும் இ. தி. மு. கழகத்தையே ஆதரிக்கிருர்கள். அதுதான் அசல் இ. தி. மு. கழகம் ஆகும் மற்றது (ஏ. இளஞ்செழியனைப் பொதுச் செயலாளர் என விளம்பரப்படுத்தி இயங்கி வருவது) நகல் கழகம்; போலிக் கழகம்"

மேற்கண்டவாறு ஆணித்தரமாக எடுத்துக் கூறும் கடிதம் ஒன்றை அன்பழகன் என்பவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையிலிருந்து சுதந்திரனுக்கு எழுதியிருக்கிருர்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"திரு இளஞ்செழியனைப் பொதுச் செயலாளராக விளம்பரப்படுத்திக் கொண்டு சில விஷமிகள் இ. தி. மு. க. என்ற பெயரில் நடத்தி வரும் இயக்கத்தை தென்னகத்தில் உள்ள தி. மு. கவினர் ஒரு இயக்கமாக ஏற்றுக்கொள்ளவுமில்லை; அதற்கு ஆதரவு அளித்து வருவதுமில்லை. தம்மை ஒரு தி. மு. க. தோழர் என்று தம் பட்டமடிக்கும் பி. எஸ். இளங்கோ என்பவர் மட்டுமே தமது "மாலைமணி" என்ற பத்திரிகையில் மேற்படி இயக்கத்தார் அந்தப் பத்திரிகையின் இலங்கை ஏஜன்ட்மூலம் அனுப்பும் செய்திகளை குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காகப் பிரமாதப்படுத்தி பிரசுரித்து வருகிருர்.

### அண்ணு, நடராசன் ஆதரவு

"திரு இரா. அதிமணியைப் பொதுச் செயலாளராகக்கொண்டு இயங்கி வரும் இ. தி. மு. க. செய்திகளை தமிழ்நாட்டிலுள்ள பிரபல தி. மு. க. பத்திரிகைகள் பலவும் வெளியிட்டு ஆதரவு நல்கி வருகின்றன. விசேஷமாக, அண்ணு நடத்திவரும் "திராவிட நாடு" "ஹோம் லன்ட்" ஆகிய தமிழ், ஆங்கில இதழ்களில் இக் கழகச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. 26-7-59 இதழ்களைப் பார்த்தாலே இது தெரியும். இன்னும் குறிப்பாக தமிழ்நாட்டு தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் திரு என். வி. நடராசன் தமது "திராவிடன்" பத்திரிகையில் இந்தக் கழகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிருர். கடந்த 25-7-59 இதழில் இந்த இ. தி. மு. க. செயற்குழுக் கூட்டச் செய்திக்கு அவர் அளித்திருக்கும் மதிப்பும் ஒதுக்கியிருக்கும் இடமும் இக்கழகம்பற்றி அவர் கொண்டுள்ள நல்லெண்ணத்துக்கும் அதற்கு அளித்துவரும் ஆதரவுக்கும் சான்ருகும்.

### சந்தேகம் இல்லை

"அறிஞர் அண்ணுவும் தென்னகத்துத் தி. மு. க. துணைப் பொதுச் செயலாளரும் மற்றவர்களும் உண்மையான கழகமாக ஏற்றுக்கொண்டு ஆதரவு அளித்துவரும் இயக்கத்தை யார்தான் சந்தேகிக்க முடியும்? அப்படிச் சந்தேகத்தை உண்டுபண்ண முயலும் விஷமிகள் (எதிர்க்கோஷ்டியினர்) எத்தனை நாட்களுக்குத்தான் 'திருவிளையாடல்'கள் நடத்திப் பிழைப்பார்களோ பார்க்கலாம்"—இப்படி அன்பழகனின் கடிதத்தில் இறுதியாகக் கூறப்பட்டு இருக்கிறது.

### இளஞ்செழியனுக்கு வெட்கம் இல்லையா?

"இளஞ்செழியனுக்கும் இ. தி. மு. க. வுக்கும் உள்ள தொடர்பு என்ன? எத்தனை நெஞ்சத் துணிவோடு தம்மைப் பொதுச் செயலாளர் என்று சொல்லிக்கொள்கிருர்! வெட்கம் மானம் ரோசம் இதில் ஏதாவது ஒன்

(9-ம் பக்கம் பார்க்க)

---

# இ.தி.மு.க. பெயரில் ஏற்பாடான கூட்டத்தில் ஒரே குழப்பம்!

# இடையில் ஒத்திவைக்கப்பட்டு பின்னர் பொலீஸ் பாதுகாப்பில் சிறிது நேரம் நடந்தேறியது

(சுதந்திரன் நிருபர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் திரு ஏ. இளஞ்செழியனைப் பொதுச் செயலாளராக ஒப்புக்கொண்டுள்ள இ. தி. மு. கழகத்தினர் இ. தி. மு. க. பெயரில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தினர்.

ஒன்றே முக்கால் மணிநேரம் நடந்த கூட்டத்தில் ஏழு பொலீஸார் பிரசன்னமாயிருந்தும் சுமார் ஒரு மணி நேரம் தொடர்ச்சியாகக் குழப்பமும் மிகுதி முக்கால் மணி நேரத்தில் சிறிது குழப்ப இடையீடுகளோடு கூட்ட நிகழ்ச்சிகளும் நடந்தேறின.

"ஐக்கிய இலங்கைக்காக—சிங்களவர் தமிழர் ஒற்றுமைக்காக,"சமதர்மக் குடியரசு அமைப்புக்காக—திராவிடரின் குடியுரிமை மொழியுரிமைக்காக—தேசிய நலனுக்காக போராடும் இ. தி. மு க. பொதுக் கூட்டம்" மாலை 4 மணிக்கு என்று துண்டுப் பிரசுரமூலம் அறிவித்தவர்கள் 4-35 க்கு கூட்டத்தை ஆரம்பித்தார்கள்.

### கேள்விப் பாணங்கள்

தனபாலன் என்பவர் ஆரம்பத்தில் பேச வாயெடுத்ததும் கூடியிருந்தவர்களின் "நிறுத்து" என்ற குரலொலி அவரை ஸ்தம்பிக்கச் செய்தது. ஒருகோஷ்டியினர் எழுந்து "நீ யார் இங்கு பேசுவதற்கு?, "இ. தி. மு. க.பெயரில் கூட்டம் நடத்த உங்களுக்கு என்ன தத்துவம் இருக்கிறது?" "முதலில் நாம் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள்", "இளஞ்செழியனை யார் பொதுச் செயலாளராக நியமித்தது" என்று இப்படியான கேள்விப் பாணங்களை ஏக்காலத்தில் தொடுத்தார்கள்.

### ஒரே ரகளை

இதைத் தொடர்ந்து ஒரே கூச்சலும் இரைச்சலும் கிளம்பின. கூடியிருந்தவர்கள் அனைவரும் ஆசனங்களை விட்டு எழுந்து விட்டார்கள். மேடையில் இருந்தவர்களும் எழுந்து ஏதேதோ சமாதானம் எல்லாம்சொன்னுர்கள். ஆயினும் பரபரப்பான நிலைமையை தவிர்க்க முடியவில்லை. ஒரே ரகளையாக இருந்தது. நாற்காலிகள் பறக்காததும் ஆளுக்காள் கைவரிசை காட்டாததும் பாக்கியாக மற்றப்படி முழுமையாக அராஜகம் நிலவியது.

### கூட்டம் ஒத்திவைப்பு

மிக மோசமான கட்டம் வந்தபோது மேடையில் நின்ற ஒருவர் மேடை அடைப்புச் சட்டக் கிறுதியில் ஏறி நின்று கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாக கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் சார்பில் அறிவித்தார். அதைக் கேட்ட ஒலிபெருக்கிக்காரர் தமது கடமை முடிந்தது என்ற நினைப்பில் ஒலிபெருக்கி ஏற்பாட்டைத் துண்டித்துவிட்டார்.

### பொலீஸார் ஏழு பேர்

அப்போது முன் இருந்த 2 பொலீஸ்காரரோடு இன்னும் 5 பேர் வந்து சேர்ந்தார்கள். அப்போதும் குழப்பம் ஓயவில்லை. சுமார் 15 நிமிஷம் கழிந்த பின்னர் ஓரளவு அமைதி ஏற்படவே கூட்டத்தை நடத்த முடிவு செய்து அப்படியே தொடங்கினுர்கள்.

### அதிமணியின் ஆட்கள்

குழப்பம் விளைவித்த கோஷ்டி திரு இரா. அதிமணியைத் தலைவராகக் கொண்டு இயங்கிவரும்இ.தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள் காணப்பட்டார்கள். கழகப் பற்றுதலும் கொள்கை உறுதிப்பாடும் கொண்டவர்கள் தாம் என்று அவர்கள் சொல்லிக் கொண்டதை மெய்ப்பிக்கும் வகையில் அவர்களுடைய உணர்ச்சிக் குமுறலும் ஆவேசமும் அன்று காணப்பட்டன.

அவர்கள் கேட்க இருந்த கேள்விகளை எல்லாம் சிட்டில் எழுதிக் கொடுக்கும் பட்சத்தில் பதில் இளஞ்செழியனல் சொல்லப்படும் என்ற உறுதி கிடைத்ததும் அந்தப் பதில்கள் வரும் கட்டத்தை எதிர் நோக்கிக் கொண்டு எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

### வெளியேற்றம்

12 பேர் பேசுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் தலைமை வகித்த பாண்டியனையும் இளஞ்செழியனையும் விட இரண்டு மூன்று பேர் மாத்திரமே சிறிதளவு பேசினுர்கள். திரு. க. இரத்தினம் பேசுகையில் "உங்களுடைய கட்சி எங்களுக்கு வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டு சிலர் வெளியேறினுர்கள்.

இளஞ்செழியன் பேசும் போதும் அடிக்கடி குழப்பம் ஏற்பட்டது. தமது கட்சி எந்த இலட்சியத்துக்காகப் போராடுகிறது என்பது குறித்து அவர் பேசிவிட்டு கேள்விகள் சிலவற்றிற்கு பதில் சொன்னுர்.

(9-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசாங்க அலுவலகத் தமிழ் ஊழியர்கள் இந்திய வம்சாவழித் தமிழர்—இலங்கைத் தமிழர் ஒற்றுமைக்கு இடையூறு

## பொதுமக்களிடம் இங்கிதமாகப் பேசி பண்போடுபழகி பணிசெய்யும் பழக்கம் இன்னும் இல்லை"

### யாழ்ப்பாணத் தமிழ்ப் பிரமுகர் வருத்தம்

(சுதந்திரன் நிருபர்)

"இலங்கைத் தமிழர்—இந்திய வம்சாவழித் தமிழர் ஒற்றுமைக்கு அரசாங்க அலுவலகங்களில் உள்ள தமிழ் ஊழியர்கள் பெரும் இடையூறாக இருக்கிறார்கள்.

"இந்திய வம்சாவழித் தமிழர் இலங்கைத் தமிழனை நொந்து கொள்ளுமளவுக்கும் சந்தேகக் கண் கொண்டு பார்க்குமளவுக்கும் அவர்களைப் புண்படுத்தி விடுகிறார்கள் இவர்கள்.

"கருமமாற்றத் தம்மிடம் வருபவர்களிடம் இங்கிதமாகப் பேசிப் பண்போடு பழகி முடிந்த உதவியைச் செய்யும் பழக்கம் இன்னும் இவர்களுக்கு ஏற்படாதிருப்பது துரதிர்ஷ்டம்" இப்படி யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் வேதனையோடு எடுத்துக் கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் 25 லட்சம் பேரையும் இரு கூறுகளாகப் பிரித்து அவர்களுக்கிடையே ஏற்றத் தாழ்வுகளையும் மனக்கசப்பையும் வளர்த்து வருவதில் அரசாங்கம் சிரத்தை எடுத்துவருகிறது.

#### அரசாங்கத்தின் நம்பிக்கை

"இலங்கைத் தமிழர்களையும் இந்திய வம்சாவழித் தமிழர்களையும் ஒற்றுமையாக இருக்கவிட்டு வைத்தால்—ஒரே அணியில் திரள இடம் கொடுத்தால் அவர்கள் வலிமை பெற்றுவிடுவார்கள் என்பது அரசாங்கத்தின் எண்ணம். தனிச் சிங்கள அரசுக்கு ஆபத்து நேரலாம் அவர்களால் என்ற அச்சம் நீண்ட நெடு நாட்களாகவே அரசாங்கத்துக்கு இருந்து வருகிறது.

"பட்டிருப்பார் போன்ற பதவி வேட்டைக்காரரும் முஸ்தபா, காரியப்பர், அலி போன்ற கொள்கையற்றவர்களுக்கும் அற்ப சலுகைகளுக்காகவும் பதவி உயர்வுக்காகவும் தம்மினத்தைக் காட்டிக்கொடுக்கும் கயவர்களும் தமிழ் பேசும் மக்களிடையில் இன்னமும் வாழ்ந்து வருவது அரசாங்கம் தன் நோக்கத்தை நிறைவேற்றப் பெரும் அனுகூலமாயிருக்கிறது.

#### தமிழரசார் பணி

"ஆயினும் தமிழரசுக் கட்சியார் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை ஸ்தாபிக்க கடந்த பத்தாண்டுக் காலமாகத் தம்மாலானமட்டும் முயற்சி செய்து வருகிறார்கள். இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கிடையில் விஷமிகள் தம் சொந்த லாபத்துக்காக ஏற்படுத்திக் கொண்ட உட்பிரிவுகளையெல்லாம் ஒழித்துக்கட்டுவதோடு இந்திய வம்சாவழித் தமிழரையும் ஒரே தமிழர் அணியில் நிறுத்தப் பணிபுரிந்து வருகிறார்கள்.

#### தீங்கு

"இதற்கு ஆபத்து இப்போது புதிய கோணத்திலிருந்து வருவதாகத் தெரிகிறது. அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் இலங்கைத் தமிழர்கள் தாம் செய்வது என்ன என்று அறியாது செய்யும் தீங்கால் நல்ல காரியம் நாசமாக்கப்படும் துரதிஷ்டம் சம்பவிக்கிறது. அரசாங்க அலுவலகங்களுக்குச் செல்லும் தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இலங்கைத் தமிழ் குமாஸ்தாக்களும் அதிகாரிகளும் நடந்துகொள்ளும் விதம் வேதனைக்குரியதாகும் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டி இருக்கிறது.

#### புகார்

"குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டு அதிகாரி இலாகா இருக்கிறதே, இங்கு இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழருக்கு இன்றைய நிலையில் தினமும் வேலை உண்டு. பாஸ்போட், விசா, றீ—என்றி—என்று இப்படி எத்தனையோ விஷயங்களுக்கு அங்கு செல்கிறார்கள்.

"சென்றவர்கள் எல்லாம் விஷயத்தை முடித்துக்கொண்டு திரும்புவதற்குப் பதிலாகப் புகாரோடு திரும்புகிறார்கள். கடுகடுத்த முகத்தோடு வருகிறார்கள். வசை மொழிகளை வாயார வழங்குகிறார்கள். தமிழனுக்குத் தமிழன் செய்யும் 'நன்றி' இது தானா என்று ஆத்திரத்தோடு கேட்கிறார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இன்னல் பட்டுக்கொண்டு இருந்தாலும்(யாழ்ப்பாணத்) தமிழனுக்கு புத்திவராது என்று பேசுகிறார்கள்.

#### மனிதனை மனிதனாக மதிப்பதில்லை

"ஏன்? அரசாங்க காரியாலயங்களில் உள்ள யாழ்ப்பாணத் தமிழர் சிலரின் எண்ணத்தில் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை. பொது மக்களுக்கு ஊழியம் செய்யத்தான் தாம் அங்கு அமர்த்தப்பட்டோம் என்ற உணர்வு பிறக்கவில்லை. அதிகார மமதை மறையவில்லை. இனிய சுபாவம் தோன்றவில்லை. இதனால் அங்கு செல்வோரை இன்னும் ஏளனமாகவே பாவிக்கிறார்கள். [illegible] [illegible] இல்லாமல் பொரிந்து தள்ளி விடுகிறார்கள். உடனே செய்யக்கூடிய வேலைக்கு ஒன்பது நாள் அலைக்கழிக்கிறார்கள். மனிதனை மனிதனாகவே மதிக்கிறார்கள் இல்லை.

#### விசித்திரம்

"இன்னும் ஒரு விசித்திரம். சில யாழ்ப்பாணத் தமிழ்க் குமாஸ்தாக்களிடம் சென்றாலும் கூட சென்றவர் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டியிருக்கிறது. தமிழ் தமக்குத் தெரியாது என்று ஒரேயடியாகச் சொல்லி விடுகிறார்கள். சிங்கள அதிகாரிகள் கெடுபிடிகள் செய்வார்கள் என்ற அச்சத்தில் தமிழ் அதிகாரிகளிடம் சென்றால் ஏன் சென்றோம் என்று எண்ண வேண்டிய நிலைமை பெரும்பாலும் ஏற்பட்டு விடுகிறது.

#### வேண்டிய உணர்வு

"தமிழன் இந்த நாட்டில் இழந்த உரிமைகளை அடைந்து சுதந்திர வாழ்வு கிடைக்கப்பெற வேண்டுமானால் முதலில் தேவைப்படுவது 25 லட்சம் தமிழரும்

(11-ம் பக்கம் பார்க்க)

மொரிஸன் பம்புகள்



நெருங்கிப் பொருந்திய விவசாயத்திற்குரிய பம்புகள் மண்ணெண்ணெயால் தாமே இயங்கவும், [illegible] பாவனைக்கும் உத்தரவாதமுள்ளவை.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

கே. என். அப்துல் காதர் ராவுத்தர் அன் கம்பெனி லிமிட்டெட்,

312, ஸ்கின்னர்ஸ் றோடு தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 2956. தந்தி: MEDAL.

வட்டாரகாண விநியோகஸ்தர்கள்:

ராஜா ஸ்டோர்ஸ், 2/B, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்.

# அல்ஹாஜ் ஷம்சுத்தீன் ஆற்றிய தமிழ்ப்பணி



முஸ்லிம் பெருமக்களிடையே ஒரு சிறந்த தமிழ் எழுத்தாளராக விளங்கும் அல்ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன் தமது 60 வயதினைத் தாண்டிவிட்டார். அறுபதாண்டு நிறைவினை முஸ்லிம்கள்கொண்டாடுவது வழக்கமில்லை. ஆயினும் 60 ஆண்டுக் காலத்தில் சுமார் 40 ஆண்டுக் காலம் அல்ஹாஜ் வி. எம். ஷம்சுத்தின் தமிழுக்கும், இஸ்லாமிய மார்க்கத்துக்கும் செய்த எழுத்துப் பணியினைக் கௌரவித்துப் பாராட்டும் முகமாக ஈழத்திலும் தமிழ் நாட்டிலுமுள்ள பல தமிழ் சங்கங்களும், முஸ்லிம் சங்கங்களும், கூட்டங்கள் போடவும், விழாக்கள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்து வருவதாக அறியப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம் சிறீவைகுண்டத்தைத் தம் பிறப்பிடமாகக் கொண்ட அல் ஹாஜ் ஷம்சுத்தீன் இந்தியாவிலும் இலங்கையிலும் ஆங்கிலம், தமிழ், அறபி எனும் மும் மொழிகளிலும் கல்வி கற்று இன்று கணக்காய்வாளராக (ஆடிட்டர்) விளங்குகிறார். சில காலம் இவர் தினகரன் ஆசிரியர் குழுவில் ஒருவராகக் கடமையாற்றினார் என்பதும் சென்னையிலிருந்து வெளிவரும் 'முஸ்லிம் முரசு' என்னும் மாத இதழின் கௌரவ ஆசிரியராக விருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

#### அந்நிய ஆடைப் பகிஷ்காரம்

அல்ஹாஜ் ஷம்சுத்தீன் கிலாபத், காங்கிரஸ், சேரமாதேவி குருகுலப் போராட்டம் ஆகிய இயக்கங்களில் தீவிரமாகப் பங்குபற்றியவர்.

இக் காலத்தில்தான் இவருக்கு யோகி சுத்தானந்த பாரதியாரின் தோழமை கிடைத்தது. தமது எழுத்துத் திறமையாலும், பொது நல சேவையினாலும், மேடைப் பேச்சினாலும் தென்னாட்டு முஸ்லிம்களுக்கிடையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் இவர். காங்கிரஸ் சேவையிலீடுபட்டிருந்த சமயம், திரு. பெ. திரிகூட சுந்தரம்பிள்ளை 1923-ல் இலங்கை வந்த போது அவருடன் சேர்ந்து அந்நிய நாட்டுப் புடைவைகளைப் பகிஷ்கரிக்கப் பிரசாரம் செய்தார்.

#### வெளியீடுகள்

பாரசீகப் பெருங் கவிஞர் உமர் காயத்தினுடைய நூலைத் தமிழில் மொழி பெயர்த்ததோடு, "பாகிஸ்தான் விளக்கம்" என்ற ஆங்கில நூலையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 'முஸ்லிம்களின் தற்கால நிலைமை', 'இஸ்லாத்தின் ஏகத்துவம்', 'வியாசக் கோவை' போன்ற நூல்களுக்கும் இவர் ஆசிரியராவார். பௌத்தமதத்தைப் பற்றிய ஒரு நூலும், 'இலங்கையில் முஸ்லிம்களின் குடியேற்ற வரலாறு' என்னும் ஒரு நூலும் விரைவில் வெளிவரவிருக்கின்றன.

#### மொழிக்கொள்கை

பல சமயத்தவரிடையும் இவருக்குப் பண்புமிக்க நண்பர்கள் உளர். தென்னக முஸ்லிம்களிடையில் இவர் புதுமையான கருத்துக்களை வெளியிட்டபோது, வைதிக முஸ்லிம்களால் கிளப்பப்பட்ட எதிர்ப்புகளைத் தனியாய் நின்று போராடி வெற்றியீட்டினார். இலங்கை முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ்தான் என்பது இவருடைய ஆழ்ந்து ஆராய்ந்த முடிவு ஆகும். இக்கருத்தைப் பிரசாரம் செய்து இலங்கை வாழ் முஸ்லிம்கள் மொழி மாறாட்டத்தால் பிரிந்து இஸ்லாமியப் பண்பினை இழந்து விடாதபடி பாதுகாத்து வருகின்றார்.

அல்ஹாஜ் வி. எம். சம்சுத்தீனைப் பற்றி அவர் நண்பரான இலங்கைத் தேசியக் கவிஞர் திரு. பரமஹம்சதாசன் எழுதிய ஒரு வாழ்த்துப் பாவில் பின்வருமாறு கூறுகின்றார்:

" ..........................................
சான்றோர் புகழத்
 தமிழ் ஆங்கிலம் பயின்று
ஆன்ற முயற்சி
 பொருளாக்கம் அருளார்வம்
போன்ற பல துறையிற் செல்வப்
 பொலிவவை யெல்லாம்
ஈட்டி மனைச் சிறப்போ
 டின்புற் றிலங்கை மணி
நாட்டில், நல் வாழ்வு
 நடத்தும் வ. மி. ஷம்சுத்
தீன் என்னும் பேர் படைத்த
 செல்வ! நிகழ் உண்மைத்
தீன் இஸ்லா மாகச்
 சிறந்தும் வெறுப் பின்றி
முத்தமிழ் ஞானி
 முனிவன்; கவியோகி
சுத்தானந் தத்துறவி
 சொல்ல முதை வாரியுண்டு
அல்லா ஒருவன்
 அவனே சமய மெல்லாம்
உள்ளான் எனும் பெரிய
 உண்மைச் சமரஸநற்
பேரறிவைப் பெற்ற
 பெரியோய்! பல நூல்கள்
ஆராய்ந் தறிந்து
 அளித்தநல் ஆசிரிய!
.......................................... "

என்றவாறு புகழ்ந்து ஈற்றில் வாழ்த்தி முடிக்கின்றார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூங்கில் திரைக்குப் பின்

கூன்டன் நகரின் மிகப் பெரிய விளையாட்டரங்கிற்குச் சென்றோம். 1949ம் ஆண்டுக்குப் பின்னர் தொழிலாளிகளின் சொந்த முயற்சியால் இம் மாபெரும் அரங்கு கட்டப்பெற்றது; 75,000 மக்கள் வசதியாக இருந்து விளையாட்டுகளைப் பார்வையிடலாம். மா சே துங்கின் உருவப் படம் பிரம்மாண்டமான அளவில் அரங்கின் ஒரு பக்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

அங்கிருந்து தொல்பொருட்காட்சி நிலையத்திற்குச் சென்றோம். ஏழடுக்குக் கட்டிடம். சீனாவின் வரலாற்றை ஏழு காலக் கூறுகளாக வகுத்து, ஒவ்வொரு காலத்திற்குமுரிய நூதனப் பொருட்களை ஒவ்வொரு மாடியில் வைத்திருக்கிறார்கள். கீழ்மாடியிலிருந்து ஏழாவது மாடிக்குச் செல்லும் ஒருவருக்குச் சீனாவின் வரலாறு ஓரளவிற்குத் தெரிந்துவிடும்.

## நாட்டு வரலாறு

பொதுவுடமையாளர் தமக்கேற்ற வகையில்தான் வரலாற்றினையும் மாற்றிப் படைத்திருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லையெனக் கருதுகிறேன் ஏழாவது மாடியிலே, பொதுவுடமையாட்சி தோன்றிய பின் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல், சமூக மாற்றங்களைப்பற்றி மிக விரிவாக புள்ளி விவரங்கள் விளக்கப் படங்கள் முதலியவற்றின் மூலம் 'விளாசி'யிருக்கிறார்கள். காட்சி நிலையத்திற்கு வந்திருந்த சீன மக்கள் பலருக்கு நம்மவர்களே குறிப்பாக நமது குழுவிலிருந்த சேலைகட்டிய மாதரே காட்சிப் பொருள்களாக அன்று தென்பட்டனர்.

## உள்ளே செல்ல அனுமதி இல்லை

சீனக் குடியரசின் தலைவராயிருந்த சன்-யாட்-சன் நினைவாகப் புதிதாக அமைக்கப்பெற்ற மாபெரும் களியாட்ட அரங்கமொன்றைக் காண்பதற்காகச் சென்றோம். அப்பொழுது அங்கு தொழிற் சங்கமொன்றின் கூட்டமொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. "அரங்கையும் பார்க்கலாம்; தொழிற் சங்கக் கூட்டம் பொதுவுடமை நாட்டில் எவ்விதம் நடைபெறுகின்றது என்பதையும் பார்க்கலாம்; ஒரு கல்லில் இரு மாங்காய்" என எண்ணி இறும்பூதெய்திய எமக்கு ஏமாற்றமே கிடைத்தது. என்ன காரணமோ தெரியவில்லை; உட்செல்ல அனுமதியில்லை!

## பொருள்களின் விலை

அரசாங்க விற்பனை நிலயத்திற்குச் (Departmental Store) சென்றோம். இது சென்னை மூர் மார்க்கட் போன்றது. ஆனால் அதைவிட அளவில் பன்மடங்கு பெரியது, எல்லாவிதமான பொருட்களும் இங்கு கிடைக்கும்! விலைகள் குறிக்கப்பட்டிருந்தன. பொதுவுடமை நாடுகளிலே பொருட்களின் விலைக்குப் பேரம் பேச வேண்டிய அவசியமே இல்லை. எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் விலையொன்றே!

இடாம்பீகமான பொருட்கள் பலவற்றிற்கு இங்கு ஏறுமாறான விலை. உதாரணமாக இலங்கையில் இரண்டேகால் ரூபாய்க்கு வாங்கக் கூடிய கமெரா பிலிம் இங்கு ஆறரை ரூபாய். இவ்விலைக்குப் பிலிம் வாங்கிய பற்றுமுறி (இரசீது) இன்னும் என் கையிலிருக்கிறது. சப்பாத்துக்களின் விலையும் மிக அதிகமாகவே காணப்பட்டது.

## ஆடை தரக் கூப்பன் கேட்டார்கள்

பீக்கிங் அரசாங்க விற்பனை நிலயத்திலே சீனருடைய நாட்டுடையான மேலங்கியொன்றை வாங்

மு. சிவானந்தம் பி. ஏ. (ஆனர்சு)


குவதற்காக விலை கேட்டேன். பருத்தியுடை வாங்குவதற்கான கூப்பன் உண்டா எனக் கேட்கப்பட்டது. இரண்டாவது உலகப் போரின்போது இலங்கையிலே புடைவைவாங்கக் கூப்பன் பயன்படுத்தியது நினைவிற்கு வந்தது. பீக்கிங்கிலேயுள்ள இலங்கைத் தூதுவராலய நண்பர் அருகிலிருந்தார். தமது கூப்பன்களைத் தந்துதவ முன்வந்தார். 'ஓசி' வாங்க விருப்பமில்லையாதலின் நன்றியறிதலுடன் கூப்பன்களைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன்.

## இரயில் நிலையத்தில்


கன்டனிலிருந்து செஞ்சீனாவின் தலைநகரான பீக்கிங்கிற்குப் போய்ச் சேர கடுகெதி இரயில் மூலமாக மூன்று நாட்கள் பிரயாணம் செய்தோம். இரயிலிலேயே பல வசதிகளும் இருந்தன. இரயில்வே நிலையங்கள் எல்லாம் மிகச் சுத்தமாக இருந்தன. சில நிலையங்களிலே இரயில் வந்ததும் இறங்க வேண்டியவர்கள் இறங்கிச் சென்ற பின்னரே இரயிலேறுபவர்கள் பிளாட்பாரத்திற்குள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். "போர்மோசா விடுதலையே எமது இலட்சியம்" போன்ற உணர்ச்சியைத் தூண்டக்கூடிய எழுச்சியுரைகளைத் தவிர வேறெந்தவிதமான விளம்பரங்களையும் பொதுவாக இரயில் நிலையங்களிற் காண முடியாது. தள்ளு வண்டிகளிற் பல வகை உணவுகளையும் வைத்து விற்கிறார்கள். மோதகம்போன்ற இனிப்புப் பண்டமொன்று எங்கள் நாவைக் கவர்ந்தது.

## பெருமதிற் சுவர்

இன்றைய செஞ்சீனர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டிய பெருமதிற் சுவரையிட்டு அவ்வளவாகப் பெருமைகொள்வதில்லை. பொதுவுடமை பூத்த பின்னர் கட்டப்பெற்ற யாங்சி நதிப் பாலத்தையிட்டுப் பெருமிதம்கொள்கின்றனர். எமது கடுகெதி இரயில் இரவு ஒரு மணிக்குத்தான் இப்பாலத்தைக் கடக்குமென்றும் இப்பாலத்தின் அருமை பெரு[illegible] காண வேண்டுமென வழி காட்டி மங்கை வற்புறுத்தினாள்.



நீண்டதோர் சாலைபோல மேலே உள்ள படத்தில் சீனப் பெருமதிற் சுவர் காட்சியளிக்கிறது. கீழே உள்ள படத்தில் இருவர் சுவரின் மீது நின்றும் இருந்தும் மகிழ்கிறார்கள்.



தியன்—என்—மின் கட்டடத்தை மேலே உள்ள படத்திலும் அந்தக் கட்டடத்தின் வாசலில் சிங்கம் காவல் செய்வதைக் கீழே உள்ள படத்திலும் காணலாம்.

## மங்கையின் ஆர்வம்

"தூக்கம் பெரிதா? பாலம் பெரிதா?" என்ற பிரச்னையை ஒருவாறு மனத்திலே ஒதுக்கிவிட்டு "பாலம் பெரிதா?" என அம்மங்கையிடம் கேட்டேன். அவ்வளவுதான்! பொதுவுடமைப் புரட்சிக்குப் பின் தொழிலாளர் செயற்கரிய செய்த திறனையும், இப்பாலம் கட்டி முடித்த பெருமுயற்சியையும், ருஷ்ய தொழில் நுட்ப நிபுணர்களின் உதவியையும் பொறி இயற்கலை வல்லுநர்களின் பேராற்றலையும்பற்றி ஆர்வமுடன் விளக்கினாள். பல்கலைக் கழகத்தில் பயின்றிருந்தாலும் பொதுவுடமைக் குறிக்கோளுக்கே தன்னை அர்ப்பணித்திருந்த அம்மங்கையின் ஆர்வத்தைக் கண்டு வியந்தோம்,

## யாங்சி நதிப் பாலம்

"சீனாவின் துயரம்" (Sorrow of China) எனப் பெயர் பெற்ற யாங்சி ஆற்றைக் கடக்க மிக உறுதியாக அமைக்கப்பெற்ற பாலம் உண்மையிலேயே அதிசயங்களிலொன்றாக வைத்தெண்ணப்படவேண்டியதொன்று. இரட்டையடுக்குப் பாலம். இரயில் போக ஒரு அடுக்கு; மோட்டார் வண்டிகள் போக இன்னொரு அடுக்கு. ஆற்றின் இருமருங்கும் நகரங்கள், மின்விளக்குகள் பாலத்தின் அழகிற்கு அழகு செய்கின்றன.

## தலைநகர் செங்கோட்டை

கோட்டை மதிலுக்குள் எமது இரயில் புகுந்தது! என்ன அதிசயம்! இரயிலிலுள்ள அத்தனை பேரையும் ஏதோ நரக முகாமிற்குள் (Concentration Camp) போட்டுக் காவல் புரியப் போகிறார்களாவென நினைத்தோம்; பீக்கிங்கிற்குள் நுழைந்துவிட்டோம் என்று அறிவிக்கப்பட்டது. செஞ்சீனருடைய தலைநகர் ஓர் செங்கோட்டைதான். செந்நிறமுடைய பழைய கோட்டைகள் பல காணப்பட்டன. இரயில் நிலையமே ஓர் கோட்டை மதிலருகே நிறுவப்பட்டிருக்கிறது. அமைதிக் குழு, பண்பாட்டுக் கழ

(11-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1959 ஆகஸ்ட் மாதம் 2-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

## பொய்ப் பிரசார விஷம்

கடந்த வருடம் மே மாதம் வகுப்புக் கலவரங்கள் ஆரம்பமான போது நிலைமையை உக்கிரப்படுத்தும் வண்ணம் பொய் வதந்திகளைப் பரப்பிய குற்றத்துக்காக பதுளை நில அபிவிருத்திக் காரியாலயத்தைச் சேர்ந்த கிங்ஸ்லி கொடிப் புலி என்ற ஒரு சிங்களக் குமாஸ்தாவுக்கு பதுளை மாஜிஸ்ட்ரேட் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு மேற்படி செய்தி தினப் பத்திரிகைகளில் வெளியானதை நேயர்கள் படித்திருக்கலாம்.

1958 மே மாதம் 28-ந் தேதி பிற்பகல் 2 மணியளவில் இந்தக் கொடிப் புலி என்பவர் வேறு சிலருடன் ஒரு காரில் சென்று கந்த கெட்டிய என்ற இடத்தில் இருந்த குடியேற்ற வாசிகளிடம் பொய் வதந்திகளைப பரப்பி அவர்களை ஆவேசமும் வெறியும் கொள்ளச் செய்தார் என்று வழக்கு விசாரணையின் போது தெரிய வந்தது.

"தமிழர்கள் பதுளை நகரை நாசமாக்கிவிட்டார்கள். மகியங்கனையிலுள்ள பௌத்த விகாரையை இடித்துக் கொட்டிவிட்டார்கள். பொலீஸ் நிலையமும் தாக்கப்பட்டு விட்டது. தமிழர்களின் கொட்டத்தை முறியடிக்கப் பொலீஸார் சிங்களப் பொது மக்களின் உதவியைக் கோரி நிற்கிறார்கள்." இப்படியான பொய் வதந்திகளைப் பரப்பி குடியேற்றத் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டதாகக் கொடிப் புலி மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

இத்தகைய தூண்டுதலினாலேயே பதுளையில் பல அசம்பாதவிங்கள் நடைபெற்றனவென்றும், தமிழர்கள் தாக்கப்பட்டு உயிர், உடல், உடைமை ஆகிய நஷ்டங்களுக்கெல்லாம் ஆளானார்கள் என்றும் ஐயந்திரிபுகளுக்கிடமின்றிக் குற்றம் நிருபிக்கப்பட்டதால் பதுளை மாஜிஸ்ட்ரேட் தயவு தாட்சண்யமின்றி எதிரிக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார். அவருடைய நீதிபரிபாலனத்தையும் கண்டிப்பான தீர்ப்பையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

இந்த வகுப்புவாதப் பொய்ப் பிரசாரப் புலியைக் காப்பாற்றுவதற்காகக் கோர்ட்டில் ஆஜராகி வாதாடிய வழக்கறிஞர் யார் தெரியுமா? வகுப்புவாதம் ஒழிக என்று வாயளவில் கூச்சலிடும் சமசமாஜக் கட்சித் தூண்களில் ஒருவரும், பதுளை பாராளுமன்ற உறுப்பினருமான திரு ஜே. வி. டி. கொத்தலாவலைதான் என்பதைத் தமிழ் மக்கள் மனதில் நன்றாகப் பதித்துக்கொள்ள வேண்டும்.

பொய் வதந்திகளையும், விஷமப் பிரசாரங்களையும் அரசாங்கம் அவ்வப்போதே முளையிற் கிள்ளி கருவறுத்திருந்தால் கடந்த ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தை நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம்.

மட்டக்களப்புத் தபால் காரியாலயத்தில் வேலை பார்த்த ஒரு சிங்கள யுவதி கற்பழிக்கப்பட்டாள் என்ற ஒரு பொய் வதந்தியே 1956ம் ஆண்டுக் கல்ஓயாக் கலவரத்துக்கு வித்தாய் அமைந்தது. கிழக்கு மாகாணத்தில் ஒரு சிங்கள ஆசிரியை இராமாயணத்தில் வரும் சூர்ப்பநகையைப் போல் மானபங்கப்படுத்தப்பட்டாள்; சில அங்கங்கள் அறுக்கப்பட்டாள் என்ற உணர்ச்சியைத் தூண்டும் பொய் வதந்தியே பாணந்துறைக் கோயில் தீக்கிரையாவதற்கும், குருக்கள் முதலானோர் பொசுக்கப்படுவதற்கும் காலாயிருந்தது. நாகதிபத்து விகாரை நிர்மூலமாக்கப்பட்டது; அங்குள்ள பௌத்த பிக்கு அங்கமங்கமாகக் கண்டதுண்டமாக்கப்பட்டு மீன் பெட்டியில் அடைத்து கொழும்புக்கு அனுப்பப்பட்டார் என்ற விஷமச் செய்தியினால்தான் நாட்டின் பல பாகங்களில் கொந்தளிப்புகள் ஏற்பட்டன.

இந்தச் செய்திகளை அரசாங்கம் உடனுக்குடன் மறுத்து அறிக்கைகள் வெளியிட்டும் இத்தகைய படுபாதகமான பொய் வதந்திகளைப் பரப்பியவர்களை உரியபடி தண்டித்தும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தால் எவ்வளவோ அட்டூழியங்களையும் அழிமதிகளையும் தவிர்த்திருக்கலாம்.

இதற்கு மாறாக அரசாங்கமே—அரசாங்கத்தின் தலைவரான பிரதமர் பண்டாரநாயகாவே வானொலி மூலம் உண்மைக்கு மாறான செய்திகளையும், ஆதாரமற்ற வீண் வதந்திகளையும் ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. அரசாங்கத்தின் விஷமப் பிரசாரங்கள் தான் நிலைமையைப் படு மோசமாக்கின என்பது பகிரங்க இரகசியமாகும். நியாயம் வழங்குவதானால் கொடிப் புலிக்குக் கிடைத்த தண்டனை அரசாங்கத்தினருக்கும் கிடைக்க வேண்டுமல்லவா?

தமிழ்ப் பேசும் மக்கள் பொய் வதந்திகளை இலேசில் நம்பமாட்டார்கள். சிங்களப் பொது மக்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர் ஆராய்வின்றியே வதந்திகளை நம்பிக் கொண்டு கொடூர செயல்களில் இறங்கிவிடும் திடீர் முடிவினர் அவர்கள். எனவே அவர்களுடைய உளப்பாங்கையும் குழு உணர்ச்சியையும் உணர்ந்து அவர்களிடையே பொய் வதந்திகள் அடிபடாதபடி அரசாங்கம் சிரத்தையோடு பார்த்துக்கொண்டாலொழிய வகுப்புக் கலவரங்கள் மீண்டும் முகிழ்ப்பதை முற்றாகத் தவிர்க்க முடியாதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சில விஷ சக்திகள் சிங்களப் பொது மக்களிடையே திரும்பவும் பொய் வதந்திகளைக் கிளப்பிவிடுவதாகவும், பொய்ப் பிரசுரத் துண்டுப் பிரசுரங்களை விதைத்து வருவதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன. அரசாங்கம் விழிப்போடு செயலாற்றுமாக.

# பட்டிருப்பாருக்கு கிட்டியது பதவி!

# திரைக்குப் பின் நடந்த திருவிளையாடல்கள் யாவை?

## சுதந்திரன் செய்தியால் ஏற்பட்ட பரபரப்பும் பலாபலனும்

'பட்டிருப்பாருக்கும் பதவி கிடைத்து விட்டது! ஆம், அவர் காத்திருந்து, கொட்டாவி விட்டு, குதித்துக் குதித்துக் கால சந்து, எட்டாத காரணத்தால், கதையில் வரும் நெட்டை நரி சொன்னது போல், 'எனக்கு வேண்டாம் புளிக்கும் சீச்சீ' என்று விட்டிருந்த பதவி—அந்த அரை மந்திரிப் பதவி—அவருக்குக் கிட்டிவிட்டது!

இந்தப் பதவி அவருக்கு எப்படிக் கிடைத்தது? திரைக்குப்பின் நடந்த திருவிளையாடல்கள் யாவை? பதவி வலிய வந்ததா அன்றி சுதந்திரன் வெளியிட்ட செய்தியைச் சுட்டிக்காட்டி மண்டியிட்டு யாசித்ததா? இப்படியான விவரங்கள் அம்பலமானால் அவை யெல்லாந் திரண்டு ஒரு ரஸமான கதையாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

### எச்சில் எலும்பு!

திருவாளர் எதிர்மன்னசிங்கத்துக்கு உள்ள திறமையை அல்லது தகுதியை உத்தேசித்துப் பிரதமர் திரு பண்டாரநாயகா அவருக்கு இப் பதவியை நீட்டினார் என்று யாராவது எண்ணியிருந்தால் அது போன்ற பேதமை பிறிதொன்றில்லை. உண்மையில் தமிழ் இனத்தை, தமிழ்ப் பேசும் மக்களை, தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காட்டிக்கொடுத்த பச்சைத் துரோகச் செயலுக்குப் பரிசாக,—எச்சில் எலும்பாக—எதிர்மன்னர் முன்னால் எத்திவிடப்பட்டதுதான் இந்த அற்பப் பதவியாகும்.

### உறுதிமொழி காற்றில்?

கடந்த பொதுத் தேர்தலின்போது தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய முன்னணி என்று ஒரு இல்லாத ஸ்தாபனத்தின் பேரால் போட்டியிட்டவர்தான் இந்த எதிர்மன்னர். அப்போது அவர் வெளியிட்ட தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன கூறினார்? மட்டக்களப்பு மக்களுக்கு ஞாபகமிருக்கிறதா? பட்டிருப்பு மக்களுக்கு மனதில் பதிந்திருக்கிறதா?

"தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து பெறுவதற்காக நான் இறுதிவரை போராடுவேன். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து தர மறுக்கும் எந்த அரசாங்கத்துடனும் நான் சேர மாட்டேன். ஒத்துழைக்க மாட்டேன்."

இதுதான் திருவாளர் எதிர்மன்னசிங்கம் கூறிய உறுதிமொழியின் சாரமாகும். இப்படிக் கூறிய இந்தத் தலைகுத்துக்கரணவீரர் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துப் பெறப் போராடினாரா? சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்த எம். ஈ. பி. ஆட்சியை எதிர்த்தாரா? இல்லை, பட்டிருப்பு மக்களை ஏமாற்றிப் பதவிக்கு வந்ததும் அரசாங்கக் கட்சியில் சேர்ந்தார். இன்று அவர் [illegible] யும் கட்டிக்கொண்டார்.

### பிரதமர் அளித்த பதில்

எம். ஈ. பியை விட்டுபிலிப் குணவர்த்தன கோஷ்டி வெளியேறியதும், பிரமதர் பண்டாரநாயகா எஞ்சியிருந்தவர்களுக்கெல்லாம் பதவி யென்ற எலும்புத் துண்டுகளை வீசி அரசாங்கக் கட்சியைப் பலப்படுத்த எத்தனித்தார். ஆனால் அவர் எதிர்மன்னருக்கும் மூதூர் அலிக்கும் பதவிகள் கொடுக்க எண்ணவில்லை. இவர்களில் ஒருவர் பிரதமருக்கு தூது விட்டுப் பேசியபோது பிரதமர் அதைப் பொருட்படுத்தவில்லை யென்றும் "பாராளுமன்றத்தில் பேச முடியாதவர்களுக்குப்பதவிகொடுத்து

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

என்ன செய்வது? சிங்களம் பேசத் தெரிந்தாலாவது பரவாயில்லை" என்று பிரதமர் பதிலிறுத்ததாகவும் சுதந்திரனில் ஒரு செய்தி வெளியிடப்பட்டது.

இந்தச் செய்தி வெளியானதும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் படுத்தபடுக்கையாகக் கிடந்த திரு. எதிர்மன்னரின் 'கள்ளம்' நிறைந்த உள்ளம் குறுகுறுக்க ஆரம்பித்திருக்க வேண்டும். அதன் வேதனை தாங்க மாட்டாதவராக அவர் பத்திரிகைகளுக்கு ஒரு அவசர அறிக்கையை விடுத்தார்.

### மக்கள் பணியே என் கடன்

அந்த அறிக்கையில் அவர் கூறியதன் சாரம் மிக மிக வேடிக்கையானது."ஐயகோ, எனக்கும் பதவி ஆசையுண்டா? கிடையவே கிடையாதே. மக்கள் தொண்டு தான் என் நோக்கம். நான் அரை மந்திரிப் பதவியை ஆசித்ததுமில்லை, ஆசிக்கப் போவதுமில்லை. கிடைத்தாலும் ஏற்கப் போவதுமில்லை. பதவியில்லாமலே மக்கள் பணி செய்து கிடப்பதே என் கடன். நான் பதவி கோரினேன், அது மறுக்கப்பட்டது, நான் ஏமாற்றமடைந்தேன் என்பன வெல்லாம் வெறுங் கட்டுக் கதைகள், பொய்கள், புனைசுருட்டுக்கள்". இந்தத் தோரணையிலே அறிக்கை வெளியிட்டார் திரு எதிர்மன்னர். இவ்வளவும் சுதந்திரன் வெளியிட்ட செய்தியைப் பொய்யெனக் காட்டிப் பொது மக்களை ஏமாற்றிவிடலாம் என்று செய்யப்பட்ட திருகுதாளமாகும். ஆனால் பொது மக்கள் ஏமாறுவார்களா? சுதந்திரன் ஒரு அரசியல் செய்தி வெளியிட்டால் அதை ஆண்டவனே வந்து நேரில் மறுத்தாலும் தமிழ்ப் பொது மக்கள் நம்பமாட்டார்களே.

இதன் பின்னர், திரு. எதிர்மன்னசிங்கமும், மூதூர் முகம்மது அலியும் கொழும்புக்கு ஓடோடியும் வந்தார்கள்.

### அலியின் சட்ட ஞானம்!

முகம்மது அலி கொஞ்சம் சுதந்திரனைப் பயமுறுத்திப் பார்க்கலாம் என்று சில தந்திரங்களைக் கையாண்டார். "எனக்குப் பாராளுமன்றத்தில் பேசத் தெரியாது என்ற பொருள்பட பிரதமர் பண்டார நாயகா கூறியதாக சுதந்திரன் ஒரு செய்தியைப் பிரசுரித்துவிட்டது. அதனால் என் மானம் கப்பலேறிவிட்டது. நான் இதோ சுதந்திரன் மீது மான நட்ட வழக்குத் தொடரப் போகிறேன். சுதந்திரனை ஆட்டிவைக்கிறேன்" என்று சில தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் சுதந்திரன் ஆசிரியருக்கு பயமுறுத்தல் செய்திகளை அனுப்பத் தொடங்கினார் முகம்மது அலி. இலைச் சருகைச் சலசலத்துப் பனங் காட்டு நரியைப் பயங்காட்டி விடலாம் என்று எண்ணிய அலியின் சட்ட ஞானம் பரிதாபத்துக்குரியது!

### சட்ட ஆலோசனை

ஆசிரியர் பதறிவிழுந்து மன்னிப்புக் கோருவார் என்று அலி எதிர்பார்த்திருக்கவேண்டும். ஆனால் ஆசிரியர் அசைந்து கொடுக்காமல் இருக்கவே அவர் சில முஸ்லிம் சட்டவாதிகளை ஆலோசனை கேட்டார் என்றும் அவர்கள் சுதந்திரனைப் படித்து விட்டு, அதில் "மானமும் இல்லை; நஷ்டமும் இல்லை. ஒரு தனிமனிதனின் தொழில் திறமையைப் பற்றிக் கூறினால் அது ஒருவேளை மான நஷ்டமாகலாம். ஆனால் ஒரு பொதுமனிதனின்-அதிலும் அரசியல்வாதியின் திறமையையும் மடைமையையும் பற்றி விமர்சிக்க, அபிப்பிராயம் தெரிவிக்க எந்தப் பத்திரிகைக்கும் உரிமையுண்டு. இதில் வழக்குப் போட்டால் 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற நிலைதான் ஏற்படும்" என்று சட்ட ஆலோசனை கூறியதாகவும் தெரிய வருகிறது.

### சரணம்! சரணம்!

இந்த நிலையில் அலியும் எதிர்மன்னரும் பிரதமர் பண்டாவிடம் சென்று சரணடைந்தார்கள். "அப்பனே, பண்டாரநாயகனே, ஆபத் பாந்தவனே, அடியேமை இரட்சியும். சுதந்திரன் வெளியிட்ட உண்மைச் செய்தியினால் எங்கள் மானம் எதிர் மானமாகிவிட்டது! செல்வாக்கு செல்லாக் காசாகிவிட்டது. புகழ் பூஞ்சணம் கட்டிவிட்டது; மதிப்பு மறு பதிப்பாகிவிட்டது. நடப்பு இடுப்பொடிந்துவிட்டது. இனி எஞ்சியிருப்பது அடுத்த பொதுத் தேர்தலில் தோல்வி ஒன்று தான். எனவே எம்மைக் காத்தருளும் ஹொரகொல்லைக் கோமானே!" என்று மண்டியிட்டுத் தண்டனிட்டனர்.

### யாது வரம் வேண்டும்?

உடனே பண்டாரநாயகா சுங்கானை வெளியே எடுத்து

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் கந்தையா—நாடகம்



இலங்கை வானொலியில் தொடர்ச்சியாக ஒலிபரப்பப்பட்டு வந்த "லண்டன் கந்தையா'' நாடகத்தில் ஒரு காட்சி.

பலராலும் பாராட்டப் பெற்ற இந்த நகைச்சுவை நாடகம் 2-8-59 ஞாயிறு மாலை 6.30 மணிக்கு கொழும்பு றேயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அன்று அதே மண்டபத்தில் லண்டன் கந்தையாவின் நந்தனுர் பற்றிய ஆங்கிலக் கதாப்பிரசங்கமும் கே. கே. அச்சுதனின் ரொக்-அன்-ரோல் நடனமும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# பட்டிருப்பாருக்கு கிட்டியது..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சுருள் சுருளாகப் புகையை விட்டு. "என் அருமைப் பக்தர்களே! ஆயினும் பதவிப் பித்தர்களே! அஞ்சற்க, அஞ்சற்க!! இதோ அபயமளித்தோம். யாது வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

"அனுதரட்சகனே, தாங்கள் எமக்குப் பதவி தந்தாலும் தராவிட்டாலும் உங்கள் பாதாரவிந்தமே எங்களுக்குக் கதி. எனவே தாங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும். எங்களுக்குள் நடந்த பேரமும், தாங்கள் எங்களை உதாசீனம் செய்த சமாச்சாரமும் எங்கள் நெஞ்சோடேயே இருக்கட்டும், வெளியில் தெரிய வேண்டாம். சுதந்திரன் செய்தி மட்டும் பொய்யானது என்று எஞ்ஞான்றும் மெய் பிறவாத தங்கள் திருவாயால் திருவுளம் பற்றியருள வேண்டும். அதுவும் மரிக்காரின் ஊதுகுழல்மூலம் உளறியருள வேண்டும். இப்படிச் செய்தாவது எஞ்சியுள்ள எங்கள் மானத்தை மிஞ்ச வையுங்கள் பெம்மானே'' என்று யாசித்தனர் திருவாளர் எதிர் மான சிங்க(ள)ரும், அரசியலில் 'ஆணும் பெண்ணும்' அற்றவரான திருவாளர் அலியும்!

## திருவிளையாடல்!

இந்த இரங்கலைக் கேட்ட பண்டாரநாயகர் இரங்கியவராக "அகோ வாரும் பிள்ளாயிர், இதற்கா பயப்பட்டீர்? இருப்பதை இல்லையென்றும், இல்லாததை இருப்பதென்றும், சொன்னதைச் சொல்லவில்லையென்றும், சொல்லாததைச் சொன்னதென்றும் சொற்சிலம்பம் ஆடுவதுதானே என் திருவிளையாடல். அறுபத்துமூன்றோடு அறுபத்து நாலாக இதையும் ஆடிவிடுகிறேன். அழைத்து விடுகிறேன் மந்திரி மரிக்காரை. அலற வைக்கிறேன் இலங்கை வானொலியை. நீங்கள் இன்முகத்தோடுசென்று வாருங்கள்'' என்று இயம்பலானார்.

## வள்ளல் பண்டா

இதைத் தொடர்ந்து இலங்கை வானொலியின் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று தேசிய ஒலிபரப்பிலும் 1959 ஜூலை முதலாந் தேதி காலை, நண்பகல், இரவு என்ற மூன்று சுருண வேளைகளிலும் ஒரு அரிய அறிக்கையை அன்புடன் ஒலிபரப்பி சுதந்திரனுக்கு உள்ள பெருமை போதாதென்று மேலும் புகழையும், பிரச்சாரத்தையும் ஒரு சதம் செலவின்றி இனமாகத் தேடித் தந்தார் 'வள்ளல்' திரு பண்டாரநாயகா.

இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட அந்த உன்னத அறிக்கை பின்வருமாறு:

In the issue of Sutantiran of 21.6.59 it is stated that a prominent Colombo lawyer interviewed me on behalf of Messers S. U. Ethirimanasingham and Mohamed Ali asking that they be given posts of Junior Ministers and that I declined to do so as I thought they were unfit and also because they did not know Sinhalese. The whole story is a complete fabrication. No such incident occured nor I consider the two gentlemen referred to as unfit for posts of Junior Ministers.

மேற்கூறிய அறிக்கை கீழ்க்கண்டவாறு தமிழிலும் அதே தினத்தில் ஒலிபரப்பப்பட்டது:

"சுதந்திரன் 21-6-59 இதழில் கொழும்பைச் சேர்ந்த பிரபல சட்டவாதி ஒருவர் திருவாளர்கள் எஸ். யு. எதிர்மானசிங்கம், முகமது அலி ஆகியோர் சார்பில் என்னைப் பேட்டி கண்டு அவர்கள் இருவருக்கும் உதவி மந்திரிப் பதவிகள் தரும்படி கேட்டதாகவும், அதற்கு நான், அவர்கள் அந்தப் பதவிகளுக்கு தகுதியற்றவர்கள் என எண்ணியதாலும், அவர்களுக்கு சிங்களம் தெரியாத காரணத்தாலும் அப்படிச் செய்ய மறுததுவிட்டேன் என்றும் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இச்செய்தி முழுக்க முழுக்கப் பின்னப்பட்ட செய்தியாகும். அப்படியான ஒரு சம்பவம் நிகழவும் இல்லை; அன்றியும் குறிப்பிட்ட அந்த இரண்டு கனவான்களையும் உதவி மந்திரிப் பதவிகளுக்கு தகுதியற்றவர்கள் என்று நான் கருதவும் இல்லை''

இதே அறிக்கை சிங்களத்திலும் ஒலிபரப்பப்பட்டதாம்.

## "பின்னப்பட்ட செய்தி''

இந்த அறிக்கையில் நாம் சுட்டிக்காட்டக்கூடிய ஒரு விசேஷ அம்சம் என்னவென்றால், திரு பண்டாரநாயகா 'சுதந்திரன் செய்தி முற்றும் பிழையானது; தவருனது. நான் அதை முற்றுக மறுக்கிறேன்' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக, ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி அழுத்தந் திருத்தமாகக் கூறவில்லை என்பதுதான். "பின்னப்பட்ட செய்தி'' என்ற கூற்று "செய்தி பிழையானது'' என்ற பொருளை முற்றுகத் தராது என்பதை வாசகர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த சம்பவங்கள் எல்லாம் நடந்த பின்னர் கவர்ணர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்தின்மீது வாக்கெடுப்பு நடத்தும் காலம் வந்தது. பொது வேலை அமைச்சர் திரு ஹென்றி அபயவிக்ரமா எதிர்மன்னரைப் பாராளுமன்றத்துக்கு கைலாகு கொடுத்து அழைத்து வந்தார் நேராக ஆஸ்பத்திரியிலிருந்து. வரும் வழியில் சில பத்திரிகை நிருபர்கள் எதிர்மன்னரைப் பேட்டிகண்டு அவருக்கு ஒரு அரை மந்திரிப் பதவி தானும் கிடைக்கவில்லையே என்று கவலை தெரிவித்தார்கள். அதற்கு எதிர்மன்னர் கூறிய பதில் என்ன தெரியுமா? "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. பிரதமரே என்னை ஒரு அரை மந்திரிப் பதவியை எப்படியாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டார். நான்தான், எனக்கு வேண்டவே வேண்டாம் இந்தப் பதவித் தொல்லை என்று மறுத்துவிட்டேன். என்னிடம் பிரதமரின் கடிதம்கூட இருக்கிறது. அவரிடம் என்னுடைய மறுப்புக் கடிதமும் இருக்கிறது. வேண்டுமானுல் போய்க் கேட்டு வாங்கிப் பாருங்கள்'' என்று பதிலிறுத்தாராம்.

இப்படிச் சொன்ன எதிர்மன்னர் திரும்ப எப்படிப் பதவி ஏற்ருர் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஆம், அதுதான் இரகசியம்.

## எக்களிப்பில் கொக்கரிப்பு

வாக்கெடுப்பு முடிந்த பின்னர் சாவகாசமாக எதிர்மன்னர் பிரதமரிடம் ஆஜராஞர். கூடவே கூட்டாளி அபயவிக்ரமாவையும் அபயமளிக்குமாறு அழைத்துச் சென்ருர். ஏற்கனவே செய்துகொண்ட ஏற்பாட்டின்படி சரியான நேரத்துக்கு தலைநாயகாவும் அங்கு போய்ச் சேர்ந்தார். அரசாங்கம் கவிழ்ந்துவிடாதபடி தப்பிப் பிழைத்த எக்களிப்பில் பிரதமர் பண்டா கொக்கரித்துக்கொண்டிருந்த நேரமது. அந்த நேரத்திலே சுதந்திரனை எடுத்து பிரதமர் முன்னிலையில் விரித்தார் எதிர்மானசிங்க(ள)ம் தொடர்ந்து அவர் பின்வருமாறு பேசியதாகத் தெரிகிறது. "அரசாங்கத்துடன் சேர்ந்துள்ள

(13-ம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்களை நடத்தும் போது எதிர்க்கட்சியாருடைய குத்தல் பாணங்களுக்கும், கிண்டல் கணைகளுக்கும் அரசாங்கத்தினர் ஆளாக வேண்டியுள்ளார்கள். கூடியவரை இந்த உபத்திரவத்தைத் தவிர்ப்பதற்கும், பகிரங்க இலஞ்ச விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்பதுபோன்ற எதிர்க்கட்சிகளின் பிரேரணைகள் பாராளுமன்றத்துக்கு வந்து நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குமாகவே மேற்படி தந்திரத்தைக் கையாள அரசாங்கம் ஆலோசிக்கிறது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றன.

# 'சிங்கள பண்டித'ரான....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த சிங்களவரானவர். சிங்களவராயிருந்தும் கூட இவருக்கு போதியளவு சிங்கள மொழித் தேர்ச்சி இல்லை என்பதை இவருடைய சக ஊழியர்களே ஒப்புக் கொள்கிருர்கள்.

திரு. குணரத்தினவிடம் இருந்த விசேஷ தகுதி அதாவது திரு. சுப்பிரமணியத்திடம் இல்லாத பட்சத்தில் இவரிடம் மட்டும் இருந்தது இவர் (குணரத்தின) ஒரு பௌத்தர் என்பதும் குருநாகலை எம். பியும் உதவி மந்திரியுமான திரு. மொண்ணுக்குளமையின் உறவினர் என்பதுமாகும்.

## உதவி மந்திரி மனைவிக்கு உதவி

உறவினரிலும் மிகவும் கடமைப்பட்ட உறவினர்-வேண்டியவர் என்று விஷயமறிந்தவர்கள் சொல்லிக்கொள்கிருர்கள்.

யண்டம்பலவ உப தபாற் கந்தோர் தலைவியாக திருமதி மொண்ணுக்குளமை நியமிக்கப்பட்டிருக்கிருர். இந்த நியமனத்தில் திரு. குணரத்னவின் பங்கு அதிகம் என்றும் இந்த நியமனத்தின் பின்னரும் அவர்களுக்கு மிகவும் வேண்டியவராகவே திரு. குணரத்தின நடந்து வந்திருக்கிருர் என்றும் தெரியவருகிறது.

யண்டம்பலவ உப தபாற் கந்தோரில் அடிக்கடி பணம் காணுமல் குறைந்துபோவது குறித்து தலைமை ஆபீஸுக்கு புகார்கள் வரும் சமயங்களில் எல்லாம் குணரத்தின ஆபத்பாந்தவராக இருந்திருக்கிருர் என்றும் பேச்சு அடிபடுகிறது.

பதவி உயர்வு இதற்கெல்லாம் பிரதி உபகாரமாகவே அவருக்கு அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய தபாற் கந்தோரிலுள்ள சிங்கள ஊழியர்களே சொல்லி வெதும்பிக் கொள்கிருர்கள். தமிழரான சுப்பிரமணியம் இல்லாவிட்டால் அவருக்கு அடுத்த படிகளில் குணரத்னவுக்கு மேல் உள்ள சிங்கள ஊழியர்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வு கை நழுவிப் போகச் சும்மா பார்த்துக் கொண்டு இருப்பார்களா?

# இரா அதிமணி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றேனும் சிறிதளவாவது வேண்டாமா?'' என்று காய்ந்து எழுதியுள்ள மற்ருெரு கடிதம் ஒன்றை கலைதாசன் என்பவர் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ளார்.

# சங்கீதக் கச்சேரி



திரு. எஸ். கல்யாணராமன்

சங்கீதப்பேராசிரியர் திரு ஜி. என். பாலசுப்ரமணியத்தின் அபிமான சிஷ்யர்களில் ஒருவரான திரு எஸ். கல்யாணராமன் 2-8-59 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் ஒரு இன்னிசைக் கச்சேரி நிகழ்த்தவிருக்கின்ருர்.

விவேகானந்த சபையின் கட்டட நிதிக்காக இந் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று சபை ஆட்சிக் குழுவினருள் ஒருவரான திரு எஸ். சிவசம்பு கூறினுர்.

அகில இந்திய வானொலிப் புகழ் வாய்ந்தவரான திரு கல்யாணராமன் வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் கச்சேரிகள் நடத்திப் பாராட்டுப் பெற்றவர் என்றும் சென்னை மியூஸிகல் அகடமியில் இவர் கச்சேரிக்கு நல்ல கிராக்கி யுண்டென்றும் தெரிகிறது.

# இ. தி. மு. க....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்ட நேரத்திலும் அவற்றை ஒப்புக் கொள்ளாத சிலர் வெளியேறினுர்கள். வெளியில் வந்து குவிந்து நின்ற அனைவரும் தணியாத கோபத்தோடு கூட்டம் நடத்தியவர்கள் "திருடர்கள், துரோகிகள், தின்னச் சோற்றுக்கு வழியில்லாதவர்கள், கழகப் பெயர் சொல்லிப் பிழைக்கிருர்கள்'' என்று பலவாருகக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

கூட்டம் இருள் படர்வதற்கு முன் முடிக்கப்பட்டது. இளஞ்செழியனும் மற்றவர்களும் பொலீஸாரால் பாதுகாப்பாக மண்டபத்திலிருந்து அனுப்பப்பட்டார்கள்.


சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிடெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பறியும் சிங்கம்—2

சிறுகதை — எழுதியவர்: அனந்ததேவன்

"பொலீஸ் வேஷத்தில் கொள்ளை"-'பிரபல செல்வந்தர் செல்வம் சுட்டுக்கொலை'—'பொலீஸார் புலன் விசாரணை," என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்புகளைக் கொடுத்துக் காலைப் பத்திரிகைகள் விஷயம் அறிந்த உடனேயே செய்தி பிரசுரித்திருந்தன. ஆனல் பின்வந்த தகவல்கள் பத்திரிகை ஆசிரியர்களையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கின. சற்று முன்னர் இதையெல்லாம் தெரிவித்திருக்கக் கூடாதா? இன்னும் பல ஆயிரம் பிரதிகள் அதிகப்படியாக விலைபோகக்கூடியவகையில் தலைப்புக் கொடுத்திருக்கலாமே! என்று ஆசிரியர்கள் நிருபர்களை நொந்து கொண்டார்கள்.

தொலைபேசிகள் மூலம் செய்திகள் இங்கும் அங்கும் பறந்து கொண்டிருந்த நேரம் அது. நடுச் சாமம். செய்தி கிடைத்ததும் இன்ஸ்பெக்டர் சில்வா துப்பறியும் நிபுணர் சிங்கத்தையும் அழைத்துக்கொண்டு செல்வந்தர் செல்வராசா வீட்டிற்கு தமது ஜீப்பை முடுக்கினர்.

எங்கும் நிசப்தமாக விருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில நாய்கள் மட்டும் அவலக் குரல் எழுப்பிக்கொண்டிருந்தன. மழை பெய்து ஓய்ந்திருந்த படியால் தெருக்களில் பள்ளங்களில் நீர் தேங்கி நின்றது. தெரு விளக்குகளின் வெளிச்சம் நீரில் பட்டு பார்க்கும் கண்களைக் கூசவைத்தது. ஆகவே சில்வாவினல் ஜீப்பை வேகமாக ஓட்ட முடியவில்லை.

ஒரு பள்ளத்தில் . ஜீப் இறங்கி ஒரு உலுப்பு உலுப்பிவிட்டு உறுமிக்கொண்டு ஏறிய சமயம், எங்கிருந்தோ வந்த எறி குண்டு ஒன்று ஜீப்பின் முன்னல் விழுந்து வெடித்தது. காது செவிடாகும்படியான பயங்கர ஓசை எழுந்தது. இன்ஸ்பெக்டர் சில்வா கலங்கிப்போனர். உடனே ஜீப்பை நிறுத்திவிட்டு கைத் துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு கீழே குதித்தார். துப்பறியும் சிங்கமும் ஆயுதபாணியாக ஜீப்பைவிட்டு இறங்கினர். கீழே விழுந்து வெடித்த குண்டின் சிறிய பாகங்களைக் கையில் எடுத்துப் பார்த்தார்.

"நாங்கள் இப்பாதையால் வருவோம் என்று தெரிந்து எங்களைக் கொலை செய்ய யாரோ எத்தனித்திருக்கிறார்கள். அல்லது கொலை நடந்த இடத்திற்கு உடனே எம்மைப் போகவிடாமல் காலந் தாழ்த்தும் நோக்கமாக இப்படி ஒரு தடங்கலை ஏற்படுத்தி இருக்க வேண்டும்!" என்று கூறியபடியே சிங்கம் சுற்றுமுற்றும் பார்த்தார். எல்லாப் பக்கங்களிலும் வீடுகளே இருந்தன. எந்த இடத்தில் நின்று எறிந்தால் அவ்விடத்திற்குத் தடையில்லாமல் குண்டு வரும் என்று பார்த்தார். சுற்றவர இருக்கும் வீடுகளில் எந்த வீட்டிலிருந்தும் அப் . பெரிய குண்டை எறிந்திருக்க முடியாதே என்றெண்ணியவர் தெரு ஓரத்தில் நின்ற பெரிய அரசமரத்தைப் பார்த்தார். அரசமரத்தின்கீழேபுத்த விக்கிரகம் விக்கனமற்றிருந்தது. அதுதான் ஒன்றும் பேசாதே! பார்வையை மேலே செலுத்தினர். டோர்ச் வெளிச்சத்தைப் பிரயோகித்து மரத்தின்மேல் பாகத்தை ஊடுருவிப் பார்த்தார். தெரிந்ததெல்லாம் கிளையும் இலையும் குழையுந்தான்.

"மரத்தின்மேல் ஏறிப் பார்க்கப்போகிறேன்" என்று கூறிய சிங்கத்தை சில்வா தடுத்து மரத்தடியில் புத்தர் விக்கிரகம் இருப்பதை ஞாபகமூட்டினர். பின் சிங்கம் கூறிய ஆலோசனைக்கிணங்க, சிங்கத்தைத் தனியே அவ்விடம் விட்டுச் சென்றார் இன்ஸ்பெக்டர். சிறிது நேரத்தின்பின் ஒரு கான்ஸ்டபிளுடன் திரும்பி வந்து அவனை அவ்விடத்தில் காவலுக்கு வைத்துவிட்டுச் சிங்கத்தை அழைத்துச் சென்றார்.

செல்வந்தர் செல்வராசா வீட்டு வாசலில் ஜீப் ஒரு உறுமலுடன் நிற்கவும் அங்கு கேட்ட அழுகுரலும் நின்றது. எல்லோருடைய கண்களும் ஏக காலத்தில் இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பின. இன்ஸ்பெக்டர் துப்பறியும் சிங்கம் பின் தொடர கம்பீரமான நடை போட்டுக்கொண்டு பிணத்தண்டை சென்றார். சுவரில் மாட்டப்பட்டிருந்த பெரிய சுவர்க் கடிகாரம் டிங் என்று ஒரு தரம்சத்தம்போட்டு 'நானும் இருக்கிறேன். இப்பொழுது நேரம் ஒரு மணி' என்பதை அறிவித்தது.

வீட்டுத் தூண் ஒன்றுடன் சேர்த்துக் கட்டப்பட்ட நிலையில் செல்வந்தர் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். அக் காட்சியைச் சில பத்திரிகை நிருபர்கள் படம் பிடித்துக்கொண்டு நின்றனர். அவர் பக்கத்தில் இருந்த இரும்புப்பெட்டி திறந்து கிடந்தது.

எல்லாவற்றையும் பார்த்துக் குறிப்பெடுத்துக் கொண்ட சில்வா வாக்கு மூலம் பதிவு செய்ய ஆரம்பித்தார். செல்வந்தர் மகன் சிவநேசன் பின்வருமாறு கூறினன்.

"ஒரு மணி நேரத்திற்கு முன்தான் சேர் கொலையும் கொள்ளையும் நடந்தன. நான் பக்கத்தறையில் படுத்திருந்தேன். வெடிச் சத்தம் கேட்டது. தொடர்ந்து யாரோ ஓடும் காலடிச் சத்தம் கேட்டது. லைட்டைப் போட்டுவிட்டு ஓடிவந்து பார்த்தேன். பொலீஸ் வேஷந்தரித்தவர்கள் இரண்டு பேர் ஓடிப் போய்க் கார் ஒன்றில் தொற்றிக் கொண்டு விர் என்று பறந்துவிட்டார்கள். கார் நம்பரைப் பார்த்தேன். எல்லாம் சிங்களத்தில் எழுதியிருந்ததால் ஒன்றும் புரியவில்லை" கார் புறப்பட்ட சமயம் கல்லொன்றை விட்டெறிந்தேன்.

"அது சரி இலக்கங்கள் கூடச் சிங்களத்திலா இருந்தன?" என்று குறுக்கே விழுந்து ஒரு கேள்வியைப் போட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஓம், சிறீ என்ற சிங்கள எழுத்துக்கு முன்னும்பின்னும் சிங்கள எழுத்துக்கள் இருந்தன. அதாவது நண்டுக்கு அக்கமும் பக்கமும் ருல்கள் அட்டைகள் சுருண்டு இருப்பதுபோல் ஏதோ இலக்கங்கள்..."

கலைநேசனை உறுத்துப் பார்த்த சில்வா "அப்பன் செத்துப்போய்விட்டானே என்று கலங்க வேண்டிய நிலையிலும்தம்பியின் ஹாஸ்ய ரஸனை கொழுந்துவிட்டு எரியுது" என்றார் ஏளனமாக.

அப்பொழுதுதான் இன்ஸ்பெக்டர் ஒரு சிங்களவர் என்பதை உணர்ந்துகொண்டான் சிவநேசன். "மன்னித்துக்கொள்ளுங்கள், சேர். அதன்பின் திரும்பிவந்து தந்தையாரை இந்தக் கோலத்தில் கண்டேன். இதற்கிடையில் வேலைக்காரக் கந்தனும் எழுந்துவந்து "என்னங்க இது?" என்று அழுதான். தொலைபேசிமூலம் உங்களுக்குச்செய்தியைஅறிவிக்கலாம் [illegible] தால் கம்பி அறுக்கப்பட்டிருந்தது. உடனே கந்தனை பத்திரிகை நிருபர் சுதன் வீட்டுக்கனுப்பி உங்களுக்குச் செய்தியைத் தெரிவிக்குமாறு சொன்னேன்."

இன்ஸ்பெக்டர் கந்தனைப் பார்த்தார். அவன் சொன்னன்: "வெடி அதைத் தொடர்ந்த ஆரவாரங்களைக் கேட்டு ஓடிவந்து பார்த்தேன், சின்னையா சொன்னபடி சுதனையா வீட்டுக்குப் போய் உங்களுக்குப் போன் பண்ணினேன்..."

இன்ஸ்பெக்டர் குறிப்புப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு சிங்கத்தைப் பார்த்தார். சிங்கம் சிவநேசனைப் பார்த்தார். "கார் இலக்கத்தைத்தான் நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை! என்ன கார் என்ருவது தெரியுமா?" என்றார்.

"ஒரு சிவப்பு மொரிஸ் மைனர் என்று நம்புகிறேன்"

"அது போதும்" என்று கூறியவர் தமது ஆராய்ச்சியைத் தொடங்கினர். இரும்புப் பெட்டியில் ஏதாவது கையடையாளம் தெரிகிறதா என்று பார்த்தார். புலப்படவில்லை, தொலைபேசி இருந்த மேசையைப் பார்த்தார். அவர் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. காரணம் அதில் ஒரு சாவிக்கொத்து! அதிலே ஒரு பொலீஸ் விசிலும் மாட்டப்பட்டிருந்தது!

"இது யாருடையது?" என்றார் சிங்கம்.

"தெரியாது, கள்வர்களுடையதாகத்தான் இருக்க வேண்டும்!" என்றன் சிவநேசன்.

அதைக் கையில் எடுத்துப் பார்த்த சிங்கம் இன்ஸ்பெக்டருக்குக் காட்டினர்.

"இது எப்படி இங்கே வந்தது? இது என்னுடையது தான்!" என்றார் ஆச்சரியத்தில் மூழ்கிய சில்வா.

"அப்படியானல் சரி, கள்ளன் யார் என்பது இப்பொழுது தெரிகிறதா?"

"புரியவில்லை!"

"வாருங்கள் காட்டித் தருகிறேன்" என்று கூறிய சிங்கம் வெளியே சென்று ஜீப்பில் ஏறினர். இன்ஸ்பெக்டர் பின்தொடர்ந்தார்.

ஜீப் கான்ஸ்டபிள் 303ன் வீட்டு வாசலில் நின்றது. தூங்கி வழிந்த கோலத்தில் வந்த 303, சில்வா, சிங்கம் இருவரையும் கண்டதும் உதறலெடுத்தான். உடம்பெல்லாம் வெலவெல என்று நடுக்கம் பிடித்தது. "குளிர் தாங்க முடியவில்லை" என்று கூறிச் சிரித்துச் சமாளித்தான்.

சிங்கம் தலையிலிருந்து கால் வரை 303ஐ ஏற இறங்கப் பார்த்தபடி "இன்று நைட் டியூட்டி இல்லைபோல் தெரிகிறது?" என்றார்.

"யெஸ் சேர், இன்று எனக்கு ஓய்வுங்க"

"சரிதான், அப்ப இன்று இரவு உனக்குப் பிரைவேட் வேலை ஏதாவது இருந்திருக்கும்!"

கண்களை அகல விரித்து சிங்கத்தை விழுங்கிவிடுபவன்போல் பார்த்தான் அவன். "சேர், எனக்கு ஒரு வேலையும் இல்லீங்க. நான் எங்கும் போகலை"

"பரவாயில்லை, உன் மைத்துனனே மச்சானே அவர்தான் வேலன், அவரை நாம் இப்பொழுது பார்க்க வேண்டும், எங்கே அவர்?"

"அவர் சினிமாவுக்குப் போனவர், இன்னும் வீடு திரும்பலை"

"அவருடைய கார்?"

"கார் இங்கேதான் இருக்குது. அதிலே ஏதோ பழுதுன்னு......"

"நாம் பார்க்க வேண்டும்" கார் இருக்குமிடத்தைக் காட்டினன் 303. கார் இலக்கம் சிங்களத்திலில்லை என்பதை அவதானித்த சிங்கம் "கார் பின்பக்கத்துக் கண்ணாடியைக் காணவில்லையே!" என்றார் வியப்புடன்.

"சேர் நான் முன்பே சொன்னேனே! ஏதோ பழுதுன்னு"

"சினிமாவுக்குப் போனவர் இன்னுமா திரும்பவில்லை?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். ஏதோ தானும் இரண்டு வார்த்தைகள் பேசியாக வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அவர் பேசினர். 303 வாய் திறக்கவில்லை. நடுக்கத்துடன் நின்றன்.

சிங்கம் இன்ஸ்பெக்டர் காதோடு ஏதோ சொன்னர். அடுத்த நிமிடம் ஜீப் அவர்களை ஏற்றிக்கொண்டு போய், விடவேண்டிய இடத்தில் விட்டது.

அரச மரத்தின்கீழ் காவல் செய்துகொண்டு நின்ற கான்ஸ்டபிள், அப்படியே தூங்கி வழிந்துகொண்டுநின்றன். ஜீப்பின் பகட்டான வெளிச்சம் அவன் தூக்கத்தைக் கலைத்து உசாராக்கியது.

"சேர், எவருமே மரத்திலில்லை. நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன், யாரும் இருப்பதாகத் தெரியவில்லை"

ஜீப்பைவிட்டு இறங்கிய சிங்கம் புன்முறுவலுடன் மரத்தைப் பார்த்தார். "மிஸ்டர் வேலன், எவ்வளவு நேரம் மரத்தின்மேல் இருக்கப்போகிறீர்கள்? நிம்மதியாகப் படுத்துத் தூங்குவதற்கு நல்ல இடமுண்டு. உங்கள் மச்சான், 303 உங்களை அழைத்துப் போக வந்திருக்கிறார்" என்றார் உரத்த குரலில்.

சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட பின்பும் வேலனுக்கு மரத்தின்மேல் இருக்கப் பைத்தியமா? உடனே தயங்கியவண்ணம் மெதுவாகக் கீழே இறங்கி வந்து சரணடைந்தான்.

"சேர், சேர் எனக்கு ஒன்றும் தெரியாது சேர். இவருடன் நான் கூட்டில்லை" என்றன் 303 நடுக்கத்துடன்.

"ஆனல் எனது திறப்புக் கோர்வையைக் களவாடத் தெரியும்!" என்றார் சில்வா.

"இது அபாண்டம் சேர், எனக்கொன்றுமே தெரியாது"

இன்ஸ்பெக்டர் என்ன பேசுவதென்று தெரியாமல் சிங்கத்தைப் பார்த்தார். 303ஐ விட்டு விடுவோமா? என்று கேட்பதுபோலிருந்தது அந்தப் பார்வை.

"303ன் வீட்டை முதலில் சோதனை போட வேண்டும்" என்றார் சிங்கம்.

"எதையும் செய்யுங்கள் சேர், என்னை மாத்திரம் விட்டுவிடுங்கள்" என்றன் 303 அழுதவண்ணம்.

"அட பைத்தியக்காரா சிறு பிள்ளைபோல் அழுகி

(15-ம் பக்கம் பார்க்க)

"சிறீ என்ன சிங்கள எழுத்துக்கு முன்னும் பின்னும் சிங்கள எழுத்துக்களோ இலக்கங்களோ இருந்தால் இரா வேளையில் மங்கிய ஒளியில் என்ன தெரியும்? எதுதான் புரியும்? ஆகவேதான் நண்டுக்கு அக்கமும் பக்கமும் ருல்களும் அட்டைகளும் சுருண்டிருப்பது போல் ஏதோ......!" என்றன் அவன்.

"அப்பன் செத்துப்போய் விட்டானே என்று கலங்க வேண்டிய நிலையிலும் தம்பியின்........." என்றார் இன்ஸ்பெக்டர் சில்வா.


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




- ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ்லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சாத்வீகப் போராட்டத்துக்கு அமெரிக்காவில் ஆதரவு

## நீக்ரோக்களின் உரிமைகளைப் பெற இந்த ஆயுதத்தையே பாவிப்பது எனமுடிவு

## 50-ஆண்டு சங்கத்தில் தீர்மானம்

"சட்டத்துக்கு அமைந்த முறைகளின் மூலம் நமது லட்சியத்தை அடைய சென்ற அரை நூற்றாண்டாகக் கையாண்ட முறையிலும் ஜனநாயக நெறிகளிலும் நமக்குள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துவது அவசியம்.

"பலாத்காரத்தை நாங்கள் வெறுக்கிறோம். நிறம், இனம் எதுவாயினும் அமெரிக்கர் அனைவரும் பெற வேண்டுமென்று நாங்களும் நேர்மையான மற்றவர்களும் கருதும் காரியங்களைப் பெற பலாத்கார முறையைக் கடைப்பிடிக்கக் கூடாது என்பது எங்கள் கொள்கை"

இவ்வாறு கூறும் தீர்மானம் ஒன்றை நியூயார்க்கிலுள்ள வெள்ளையரல்லாதார் முன்னேற்றத் தேசிய சங்கம் தனது 50-வது ஆண்டு மாநாட்டில் நிறைவேற்றியிருக்கிறது.

### உரிமைகள் பறிமுதல்

அடிமை விலங்கு ஒடித்த வீரர் ஆபிரகாம் லிங்கம் வாழ்ந்த அமெரிக்க நாட்டிலே இன்று வெள்ளையரல்லாதார் நிலைமை மகிழ்ச்சிக்கு உரியதாய் இல்லை. கறுத்தவர்கள் மீது நிறத்துவேஷம் காட்டுகிறார்கள் வெள்ளையர்கள். நீக்ரோ இனத்தவரின் உரிமைகள் பல பறிபோய்விட்டன. அவர்களின் சுதந்திர வாழ்வு சூறையாடப்பட்டு விட்டது.

### தமிழர்களும் நீக்ரோக்களும்

வெளியுலகிலே இருந்து பார்ப்பவர்களுக்கு அமெரிக்காவில் எல்லாம் நன்றாக நடப்பது போலத் தெரிந்தாலும் உள்ளூர நடைபெறும் அநீதிகளும் துரோகச் செயல்களும் பலவாகும். உதாரணத்துக்குச் சொல்வதானால் இலங்கையில் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் சிங்கள (பண்டாரநாயகா) அரசாங்கம் அனுஷ்டிக்கும் பாரபட்சக் கொள்கைகளையே அங்கு அமெரிக்க அரசாங்கம் கறுத்தவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நடைமுறையில் வைத்திருக்கிறது. இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு உள்ள நிலைமைதான் அமெரிக்காவில் கறுத்தவர்களுக்கு இருக்கிறது.

### கட்சியும் சங்கமும்

தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலையும் பூரண உரிமைகளும் பெற்றுக் கொடுக்க தமிழரசுக் கட்சி இருந்து செயல்பட்டு வருவது போல அமெரிக்காவில் கறுத்தவர்களுக்கு வெள்ளையரல்லாதார் முன்னேற்றத் தேசிய சங்கம் தொண்டு செய்து வருகிறது. அந்தச் சங்கம் தோன்றி 50 ஆண்டுகளாகின்றன.

### சாத்விகப் போராட்டம்

பலாத்காரத்தை அடியோடு விரும்பாது சாத்வீக வழியில் உரிமைகளைப் பெறப் போராடுவதில் சங்கம் நம்பிக்கை கொண்டிருக்கிறது. சங்கத்தின் தீர்மானத்தில் இந்த நம்பிக்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சங்கத் தலைவர் பின்வருமாறு கூறினார்:

"அரசியல் சட்டத்தில் நீக்ரோக்களுக்கு உள்ள உரிமைகளைச் சட்டப்படி அங்கீகரிக்கச் செய்யும் போராட்டத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடிய தொன்றும் இதுவரை ஏற்பட்டதில்லை" இப்படி அவர் சொன்னார்.

## மூங்கில் திரைக்குப் பின்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கம், கல்விக் குழு முதலிய பல மன்றங்களின் பணியாளர்கள் எம்மை வரவேற்றனர். "அமைதி விடுதிக்கு" எம்மை அழைத்துச் சென்றனர். 1952ம் ஆண்டு பீக்கிங்கில் நடைபெற்ற அமைதி மாநாட்டுக்குப் பல நாடுகளிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் தங்குவதற்காகப் பதினேழு வாரங்களிற் கட்டி முடிக்கப் பெற்ற மாபெரும் விடுதி.

### சிறுவர் பள்ளி

பழமையும் புதுமையும் இணைந்து விளங்கும் நகரம் பீக்கிங். புதுடில்லியில் எவ்வாறு பழைய கோட்டைகளும் வானுயர்ந்த புதிய கட்டிடங்களும் அருகருகே இருக்கின்றனவோ அவ்வாறே இங்கும். அமைதி விடுதியில் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டு பாலர் பள்ளியொன்றைப் பார்வையிடச் சென்றோம். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் மிசனரிகளாற் கட்டப்பெற்ற இப்பள்ளியில் இப்பொழுது மாணவர் தொகை மும்மடங்கிற்கு மேலாகப் பெருகிவிட்டது. பணக்காரப் பிள்ளைகளே முன்னே அனுமதிக்கப்பட்டனர். இப்பொழுது 95 சத விகிதம் தொழிலாளர் குழந்தைகளே கல்வி பயில்கின்றனர். பள்ளிக்கு வேண்டிய தளபாடங்கள், உபகரணங்கள் முதலியன அரசாங்கத்தாலேயே அளிக்கப்படுகின்றன.

### ஆசிரியர்கள்

"உப்பு, ரிக்சாக்காரர், ஆசிரியர்கள்—இவைகளே மலிவாகக் கிடைக்கும் பொருட்கள்" என்பது சீனப் பழமொழிகளிலொன்று. ஆனல் இன்றோ சீனவில் ஆசிரியர்கள் மிகவும் கௌரவிக்கப் படுகிறார்கள். அவர்களுக்கு ஊதியம் நிறையக் கிடைக்கிறது. இலவச மருத்துவ வசதிகள்போன்ற சலுகைகளுக்கும் குறைவில்லை.

### தியன்-என்-மின் கோட்டை வாசல்

வரலாற்றுப் புகழ்படைத்த மாளிகைகட்கும் உல்லாசச் சோலைகட்கும் பீக்கிங்கில் குறைவில்லை. பீக்கிங்கின் மத்தியிலே மாளிகைகட்கெல்லாம் நடுநாயகமாக விளங்குவது தியன்—என்—மின் (Tien—An—Men) கோட்டை வாசலே. தியன்-என்-மின் என்றால் "வானுலக அமைதிக்கு வாசல்" என்பது பொருள். மன்னராட்சிக்காலத்திலே இங்கிருந்து தான் ஆணைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. இந்தியாவிற்கு டெல்லியிலிருக்கும் செங்கோட்டை (Red Fort) போல, ருஷ்யாவிற்கு கிரெம்லின் (Kremlin) போல, ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு வெள்ளை மாளிகை (White Hall) போல செஞ்சீனவிற்கு தியன்-என்-மின் தான் அரசியலதிகாரச் சின்னமாக விளங்குகின்றது.

### மைதானம்

நாட்டுச் சின்னத்திலே, நாணயத்திலே இக்கட்டிட உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் வாசற் சுவரின் இருமருங்கிலும் "மக்கள் சீனக் குடியரசு நீடு வாழ்க!" "உலக மக்களின் ஒருமைப்பாடு நீடு வாழ்க!" என்ற உரைகள் சீன எழுத்திலே மிகப் பெரிய அளவில் எழுதப்பெற்றுள்ளன. வாசலிலே மாசேதுங்கின் உருவப்படம் தொங்கவிடப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்னுலுள்ள மைதானத்திலே தான் மே தினப் பவனி, குடியரசு தினப் பவனி முதலியன நடைபெறும். இப்பவனிகளைக் காண பத்தாயிரம் மக்கள் இருப்பதற்குரிய ஆசன வசதிகள் வாசலின் இருபுறத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. தியன்-என்-மின் மைதானத்தின் மறு கோடியில் புரட்சியிலிறந்த மாவீரருக்கான நினைவுச் சின்னம் மிக உயரமாகக் கட்டப்பட்டுள்ளது.

### குடியரசுப் பிரகடனம்

தெருவிலிருந்து தியன்-என்-மின் வாசலுக்குச் செல்

(15-ம் பக்கம் பார்க்க)


# ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.


## "தமிழருக்கு முறையான அறிவை ஊட்ட வேண்டும்

## கொழும்பு தமிழ்ச் சங்கத்திடம் அதற்கான வேலைத் திட்டம் தேவை"

### 17-வது ஆண்டுக் கூட்டத்தில் கா. பொ. இ.

"தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு பற்றி தமிழரிலேயே பலருக்கு தெரியாது. இவைபற்றியெல்லாம் பொருத்தமற்ற கொள்கைகளைத் தழுவி எழுந்த நூல்களைப் படித்தவர்கள் தமிழின் பழமையையும் பெருமையையும் தமிழரின் பண்பாட்டையும் சிறப்பையும் முறையாக அறியாதவர்களாய் இருக்கிறார்கள் இவர்களுக்கு சரியான அறிவை ஊட்டத்தக்க வகையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது வேலைத் திட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்"

இவ்வாறு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் 17-வது ஆண்டுக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசும் போது பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் கூறினார்.

### லண்டன் கட்டடத்துக்கு உதவி

சைவ மங்கையர் கழக மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடந்த மேற்படி கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஒன்று லண்டனிலுள்ள தமிழ்ச் சங்கம் அங்கு கட்டி எழுப்ப இருக்கும் காரியாலயக் கட்டடத்துக்கு ரூபா 100 கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அன்பளிப்பாகக் கொடுத்து உதவுவது என்பதாகும் லண்டனில் தமிழ்ச் சங்கம் இருப்பது எல்லாத் தமிழருக்கும் பெருமை தரும் விஷயமாகையால் பிற நாடுகளில் இருக்கும் தமிழர்களும் கட்டட நிதிக்குஉதவ வேண்டுமென்று தீர்மானத்தில் கேட்கப்பட்டிருந்தது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சமயம் அங்கு இருந்த சேர் கந்தையா வைத்தியநாதன் தாம் ரூபா 150 கொழும்புத் தமிழ்ச் சங்கச் சார்பில் உதவப்போவதாக அறிவித்தார்.

### பிற தீர்மானங்கள்

கொழும்பில் உள்ளது போன்றதொரு தொழில் நுட்பக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டும் என்றும் பேராதனையில் உள்ளதுபோன்ற ஒரு சிரேஷ்டகமத் தொழிற் பாடசாலையை தமிழ்ப் பகுதியில் ஆரம்பிக்க வேண்டும் என்றும், கொழும்பில் இருப்பது போன்றதொரு நுண்கலைக் கல்லூரியை தமிழ்ப் பகுதியில் தமிழ் மாணவர்கள் கற்பதற்கு வசதியாகத் தொடக்கி வைக்க வேண்டுமென்றும் கோரும் தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

### நாடக மன்றம்

தலைமைவகித்த பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில் இப்பொழுது தமிழ்ச் சங்கம் பட்டி மன்றமும் தமிழிசை மன்றமும் நடத்துவதுபோல அடுத்த ஆண்டில் நாடக மன்றம் ஒன்றையும் அமைத்து முத்தமிழும் வளர்க்கும் பணியில் ஈடுபட வேண்டும் என்றார்.

### தமிழுக்கு முதன்மை

"தமிழுக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்ற உணர்ச்சி தமிழ் மக்களிடத்து உண்டாக வேண்டும். அது அவர்களுடைய எண்ணம் செயல் என்பனவற்றில் ஒரு திருப்பத்தை உண்டாக்கும். இப்பொழுதே அந்தத் திருப்பம் தோன்றினால்தான் தமிழ் மதிப்புப் பெறும். தோன்றச் செய்யும் வகையில் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து உழைக்க வேண்டும்"—இப்படி திரு இரத்தினம் கூறினார்.

### ஒரே ஒரு சங்கம்

மேலும் அவர் பேசுகையில், "தமிழ்நாட்டிலுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்பனபோல ஈழநாட்டிலே தமிழுக்குப் பல்லாண்டாகத் தொடர்ந்து தொண்டாற்றும் பதியப்பட்ட ஒரே ஒரு தமிழ்ச் சங்கம் கொழும்பு தமிழ்ச் சங்கமேயாகும். ஆகையால் இதனை நல்ல முறையில் வளர்த்தல் ஈழத் தமிழ் மக்களின் கடனாகும்" என்று சொன்னார்.

## அரசாங்க . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமையாக நின்றுபோராடினாற்றான் எதையும்சாதிக்க முடியும் என்ற உணர்வு இந்திய வம்சாவழித் தமிழனைத் தாம் யாரோ நாம் யாரோ என்று எண்ணி ஒதுங்கி இருக்கும்படியான நிலைமையில் வைப்பதால் கேடு நமக்குத்தான்."

இப்படி அந்த யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரமுகர் கூறி முடித்தார்.




சிக்கனமானது! பிரகாசமுள்ளது!

உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு

# நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:-

எஸ். ஏ. மொகமெட் ஹாஜீயார்,

90, டாம் வீதி, கொழும்பு-12. 143, மெயின் வீதி, காலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“அத்தான்! ‘கல்யாணப் பரிசு’ தந்துவிட்ட தாங்கள் அதற்கிடையில் இப்படி மனம் மாறலாமா? அதுபற்றி யாராவது ஏதாவது தப்பாகச் சொன்னார்களா? அங்கே என்ன பார்க்கிறீர்கள், என்னைப் பாருங்கள் அத்தான்” என்று தான் கணேசனைக் கெஞ்சுகிறார் போலும் சரோஜாதேவி. ‘எல்லாரும் இந்நாட்டு மன்னர்’ என்ற படத்தில் ஒரு காட்சி.

படவிமர்சனம்:

# பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

கப்பலோட்டிய தமிழர்—தென்பாண்டிச் சீமைச் சிதம்பரம்பிள்ளையின் சுதந்திர தாகத்தையும் செக்கிழுத்துச் செத்த சோகக் கதையையும் இவ்வளவு சிறப்பாக இதுவரை எந்தத் திரைப் படத்திலும் எவரும் சித்தரித்துக் காட்டியதாகத் தெரியவில்லை. ஆமாம் பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம் படத்துக்கு தனிச் சிறப்பு அளிக்கும் அம்சம் இது என்றால் மிகையாகாது.

### உள்ளம் உருக்கும் காட்சி

கிராமப் பள்ளிக்கூடச் சிறுவர்கள் நடித்துக் காட்டுகிறார்கள். சிதம்பரனாராக நடித்த சிறுவனும் வெள்ளைத் துரையாக வந்த சிறுவனும் என்ன நடிப்பு நடிக்கிறார்கள். ஆஹா, அபாரம். தேச விடுதலைக்காக உயிர் நீத்த தலைவர்கள் தோன்றுகிறார்கள். சிதம்பரனார் செக்கிழுத்த சமயம் பாரதியார் தோன்றி நெக்குருகிப் பாடுகிறார். உள்ளம் உருகிறது. உணர்ச்சிப் பெருக்கால் உடல் புல்லரிக்கிறது.

### நடனம் பாட்டு

சாயி-சுப்புலட்சுமியின் நடனக் காட்சியும் நல்லதோர் விருந்தாக அமைந்திருக்கிறது படத்தில். கவிஞர் கண்ணதாசனின் “யாரோ நீ யாரோ” என்ற பாடலை டி. எம். சவுந்தரராஜனும், பி. சுசீலாவும் பாடுவதும் அந்தக் கட்டத்தில் எஸ். எஸ். ராஜேந்திரனும் சரோஜாதேவியும் வாயசைத்தவாறு ஊடல் செய்வதும் நன்றாக ரஸிக்கத்தக்கனவாக இருக்கின்றன.

### புது நடிகை

சசிகலா என்ற பெயரில் பள்ளி ஆசிரியையாக வரும் புது நடிகைக்கு குறைவான பாகமே தரப்பட்டிருந்த போதிலும் தம்மை ஒரு சிறந்த நடிகையாக அவர் ஸ்தாபித்திருக்கிறார். புகழ் ஏணியில் அவர் காலடி வைத்துவிட்டார். சகஸ்ரநாமம் ஆடம்பரமில்லாமல் பாத்திரத்துக்கேற்ற ஆழமான குணசித்திர நடிப்பை நல்கியிருக்கிறார். டி. ஆர். ராமச்சந்திரனும், குலதெய்வம் ராஜகோபாலும் ஹாஸ்ய விருந்து அளிக்கிறார்கள்.

கதை வசனம் பி. எஸ். ராமையா, டைரக்ஷன் பீம்சிங்; ஏ. எல். எஸ். வெளியீடு

எதற்காக இல்லாவிட்டாலும் சிறுவரின் நாடகத்துக்காகத்தானும் அவசியம் பார்க்க வேண்டிய படம் “பிரஸிடென்ட் பஞ்சாட்சரம்” கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் தியேட்டரில் காண்பிக்கப்படுகிறது.

# ரஸிகர்களுக்கு பத்மினி சரோஜாதேவி சூடான பதில்

## “எங்கள் கல்யாணத்தில் ஏன் உங்களுக்கு இவ்வளவு அக்கறை?”

“உங்கள் கல்யாணம் எப்போது? இன்னும் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கிறீர்களே, ஒருவேளை எப்பொழுதுமே கல்யாணம் செய்து கொள்ளமாட்டீர்களோ?” என்று சதா கேட்டு கிண்டல் செய்யும் ரஸிகர்களுக்கு நட்சத்திர நடிகை பத்மினியும் வேல் விழி அழகி சரோஜாதேவியும் சூடான பதில் கொடுத்து இருக்கிறார்கள். “எங்கள் கல்யாணத்தில் உங்களுக்கு இவ்வளவு அக்கறை ஏன்” என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

மலேயாவுக்கு அடிக்கடி பத்மினி போய் வருவதை மாப்பிள்ளை வேட்டைக்குத்தான் என்று தப்பாக எண்ணிக் கதை கட்டி விட்டவர்கள் வெட்கித் தலை குனியும்படி பத்மினி மேற்படி பதிலைக் கொடுத்தார். கள்ளமில்லா ரஸிகர்களை உத்தேசித்துப் போலும் நல்ல பதிலும் அவர் கொடுத்தார்.

“லலிதா அக்காவைப் போல நானும் காலம் வந்ததும் கல்யாணம் செய்து கொள்ளத்தான் போகிறேன்; குடும்பப் பெண்ணாக மாறப் போகிறேன். அதற்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன” என்று அவர் சொன்னார்.

### சரோஜா

“கல்யாணப் பரிசு” என்ற வெற்றிப் படத்தில்சரோஜா தேவி தமது திறமையான நடிப்பால் புகழ்க் கொடி நாட்டிவிட்டதைத் தொடர்ந்து அவருடைய கல்யாண விஷயத்தைப் பற்றிப் பேசுவோர் தொகையும் அதிகரித்துவிட்டது. அந்தப் படத்தயாரிப்பாளர்-டைரக்டரான ஸ்ரீதரையேசரோஜா தேவி கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார் என்றும் ஒரு புரளியைச் சில விஷமிகள் கிளப்பி விட்டார்கள். இவர்களுக்குச் ‘சுட’ வேண்டும் என்பதற்காகவே சரோஜாதேவி காட்டமான பதில் கொடுத்தார்.

அவர் மேலும் சில சமாதான வார்த்தைகளும் சொன்னார்.

“கல்யாணத்திற்கு இப்போது என்ன அவசரம்? நான் சிறு பெண்! சினிமா உலகில் புகுந்து கொஞ்ச காலந்தான் ஆகிறது! அதற்குள் கல்யாணம் செய்து கொண்டால் தொடர்ந்து படத்தில் நடிப்பது எப்படி?


“கல்யாணம் நடக்க வேண்டிய காலம் வந்தால் தானாகவே நடக்கும். எனக்கென்று எங்காவது ஒரு மாப்பிள்ளை பிறந்து இருப்பார்” இப்படி சரோஜாதேவி சொன்னார்.

### வைஜயந்தி

ஆடல் அழகி வைஜயந்திமாலாவும் இன்னும் கல்யாணம் ஆகாதவரே. ஆனாலும் அவரை “ஏன் இன்னும் இல்லை?” என்று கேட்க யாருக்கும் துணிவு பிறப்பதில்லை. வெடுக்கென்று முகத்தில் அறைந்தாற் போலப் பதில் சொல்லி கேட்டவருக்கு அசடு வழியச்செய்து விடுவார் அவர்.

ஊடலும்

ஆடலும்



ஆடல் அரிவையரும் காதல் ஜோடியும். ‘பிரசிடென்ட் பஞ்சாட்சரம்’ என்ற படத்தில்.

தலை முடியை சீவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சீவுவது எப்படி என்பதுதான்!

**நேத்திர லோக**

உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது

**நேத்திரலோக தைலம்**

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும் தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

**டபிள்யு. கே. ஜினதாஸ,**
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றோட், புறக்கோட்டை,
கொழும்பு

விமர்சனம்:

# குமாரி திருக்குமாரசாமி நாட்டியக் கச்சேரி

நாட்டிய கலாகேசரி வழுவூர் ராமையா பிள்ளையின் இலங்கை மாணவி-ராயல் கல்லூரி மண்டபத்தில் கச்சேரி-இப்படியாக அறியவந்தது. ஆவலோடு சென்றோம். எதிர்பார்த்ததற்கு மேலான திருப்தியோடும் பூரிப்போடும் பெருமையோடும் திரும்பமுடிந்தது.

### ஈழமாதா புளகாங்கிதம்

திரை விலகியது. இதழ்க் கடையோரத்தில் இள நகை தவழ இன்முகம் காட்டி இடுப்பிலே வைத்த கைகளோடு ஒய்யாரமாக நின்றார் குமாரி திருக்குமாரசாமி. பாட்டொலி தொடங்கவும் வழுவூராரின் கையிலிருந்த தாளம் விழவும் சரியாக இருந்தது. காலைத் தூக்கி ஆடத்தொடங்கினார் குமாரி. பார்த்தவர்கள் உள்ளத்தைப் பறிகொடுத்தார்கள். கண்களைச் சிமிட்டியும், கை நயனம் காட்டியும், உடலை வளைத்தும் மிக லாவகமாக ஆடினார். நாமென்ன ஈழ [illegible] புலமை கண்டு புளகாங்கிதம் அடைந்திருப்பாள்.

### அலாதியான அனுபவம்

குமாரி திருக்குமாரசாமி நடன முத்திரைகள் பதிப்பதும், பாவங்களை பொழிவதும், அங்கங்களை அசைப்பதும், தனிக் கவர்ச்சிதரும் அம்சங்களாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு கட்டத்திலும் மென்மை துலங்க தண்மை பொலிந்து விளங்க தளிர் மேனியின் தன்மை தோன்ற, கலை அம்சம் தலை தூக்க ஒயிலாக நின்றும், இருந்தும் எழுந்தும், குனிந்தும், சுழன்றும், துள்ளியும் ஆடுவதில் உள்ள சிறப்பையும் அதால் கிடைக்கும் அனுபவத்தையும் எழுத்தில் உள்ளபடி வடிக்க முடியாது.

### கம்பீர்யம் இல்லை

இத்தனையும் இருந்த இடத்தில் எப்படித் தேடியும் கிடைக்காத ஒன்றையும் இங்கே குறிப்பிட வேண்டும். அதுதான் காம்பீரியம் (Dignity). நடனத்துக்கு மற்ற எல்லா அம்சங்களையும் போல இதுவும் மிக மிக அவசியமாகும். பரத நாட்டியத்தின் பண்புகெடாமல் இருக்க இதுவும்தேவை சில தாண்டவத்தை அபிநயித்துக் காட்டியபோது இது இல்லாத குறை தெற்றெனப் புலனாயிற்று.

### தாளம்

குமாரி திருக்குமாரசாமி தம்மளவில் தாம் திறமைமிக்கவர் என்பதைக் காட்டுகிறார். அவருக்கு அன்று பதம் பாடப்பட்டதும் தாளம் வழங்கப்பட்டதும் வேண்டிய அளவு அனுசரணையாக அமையவில்லை. நட்டுவாங்கம் செய்த வழுவூரார் பழக்கத்தைப் பொறுத்து குமாரி ஆடியதைப் பார்க்காமலே தாளம் வழங்கினார். அது சிறப்புத்தான். ஆனால் நடனத்துக்கு ஏற்றபடி தாளம் சில கட்டங்களில் இல்லாமல் போகுமானால்...? உதாரணமாகக் குமாரி குந்தி எழுந்திருந்த எத்தனையோ கட்டங்களில் தாளமும் இல்லை; அதன் பயனாக மிருதங்கத்தில் தீர்மானமும் இல்லை. அந்தக்கட்டங்கள்எப்படிச் சோபிக்கும்?

வழுவூரார் போக இன்னொருவரும் தாளம் வழங்கினார். இருவர் தாளம் வழங்குவது ஆடுபவருக்கு இடைஞ்சல் ஏற்படுவதை நேரில் காண முடிந்தது. இருவருடைய தாளத்துக்குமிடையில் ஒரு அட்சரம் வித்தியாசப்பட்டாலும் கூட நாட்டியமாடுபவர் திணற வேண்டியதுதான். இது நடந்தது வருத்தத்துக்குரியது.

### பாடல்கள்

பாடியவர் முதல் இருந்து கடைசிவரை ஒரே மாதிரி

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே தமிழன் நான். எனக்குப் பதவி முக்கியமல்ல. பதவி வகிக்கும் தகுதி எனக்கு இல்லையென்று சொன்னாலும் நான் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் எனக்கு சிங்களம் தெரியாததால்தான் பதவி கிடைக்கவில்லை என்று தமிழ் மக்கள் எண்ண இடமளிக்கக்கூடாது. இந்த உண்மையைத்தான் சுதந்திரன் வற்புறுத்தி விட்டது. தமிழ் மக்கள் பரபரப்பு அடைந்து விட்டார்கள். இதை முறியடிக்காவிட்டால் தமிழ்ப் பகுதிகளில் நான் தலைகாட்ட முடியாதது ஒரு புறமிருக்க உலகத்துக்கே இந்த அரசாங்கம் பதில் சொல்ல முடியாமல் இருக்கும். எனவே எனக்கு ஒரு பதவிதந்து தமிழரும் திரு பண்டாரநாயகா அரசாங்கத்தில் பதவி ஏற்றுள்ளார்கள் என்ற மாயத் திரையைப் போட்டு மயக்கி

# பட்டிருப்பாருக்கு கிட்டியது...

விடக் கூடியவர்களை மயக்கி அருளுமாறு கோருகிறேன்."

இந்தக் கோரிக்கைக்கு அபயவிக்ரமாவும் தஹநாயகாவும் ஒத்தாசினார்களாம். பழுத்தது ஒரு அரை மந்திரிப் பதவி!

வெட்கங்கெட்ட நாடகம்!

இந்த வெட்கங்கெட்ட நாடகத்தைப்பற்றி சுதந்திரன் எழுதினால் எதிர்மன்னரின் கையாட்கள் நாம் வேண்டுமென்று பாதகமான அபிப்பிராயம் தெரிவிப்பதாக நம்மீது சீறி விழுவார்கள். அவர்கள் கண்ணோட்டத்தில் ஒரு பொதுப் பத்திரிகை என்று கருதப்படும் Ceylon Observer (Sunday Edition) சிலோன் ஒப்சேவர் 19-7-59 ஞாயிறு இதழில் அதன் அரசியல் விமர்சகர் "மறதி நோய்" என்ற தலைப்பில் என்ன எழுதியிருக்கிறார் என்பதை மட்டும் இங்கு குறிப்பிட்டு இக் கட்டுரையை முடிக்கிறோம்:

AMNESIA

One of the shortest known memories of any politician appears to be that of Mr. S. U. Ethirimanasingham who drove into Queen's House yesterday to become the fifteenth Parliamentary Secretary of the SLFP Government.

Mr. Ethirimanasingham's memory was so short that he was able to forget the basis on which he entered Parliament and switch over to the Government instead.

While on the backbenches of the Government his short memory again enabled him to cast aside his election-time promises to his voters and stand by a Government which has created more communal discord than anybody had ever dreamed to be pos ible in such a short time.

And now, once again, he has shown that his emory does not bear even a trace of the public statement he made so very recently in which he announced that he had been offered the post of Junior Minister but had rejected it.

Perhaps Mr. Ethirimanasingham might have cause to wish that his constituents would also share in the facility he possesses for forgetting the significant things in his political life fast.

மேலே காணப்படும் ஆங்கிலப் பந்தியின் தமிழாக்கம் பின்வருமாறு:

மறதி நோய்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் பதினைந்தாவது பாராளுமன்றக் காரியதரிசியாக வருவதற்கு நேற்று இராணி மாளிகையுள் நுழைந்த திரு எஸ். யு. எதிரிமானசிங்கத்தின் ஞாபகசக்திதான் நாம் அறிந்தவரையில் ஒரு அரசியல்வாதியினுடைய ஆகக் குறைந்த ஞாபகசக்தி என்று தோன்றுகிறது.

திரு எதிரிமானசிங்கத்தின் ஞாபகசக்தி மிக மிகக் குறுகியதாக இருந்ததால் எந்த அடிப்படையில் பாராளுமன்றத்துக்கு அவர் சென்றாரோ அதை மறந்துவிட்டு அவரால் அரசாங்க கட்சிக்குத் தாவ முடிந்தது.

அரசாங்கக் கட்சியின் பின் வரிசை ஆசனங்களில் இருந்த போதும் அவருடைய குறுகிய ஞாபகசக்தி, தேர்தல் காலத்தில் தமது தொகுதி வாக்காளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட உதவியது. அது மட்டுமல்லாமல் மிகக் குறுகிய காலத்தில் எவரும் செய்யலாம் என்று கனவுகூடக் காண முடியாத அளவு இனக் கொந்தளிப்பை மூட்டிய ஒரு அரசாங்கத்தோடு நிற்கவும் அந்தக் குறுகிய ஞாபகசக்தி அவருக்கு உதவியது.

இப்போது, திரும்பவும், தமக்கு உதவி மந்திரிப் பதவி வழங்கப்பட்டதாகவும், அதை தாம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் சமீபத்தில் தாம் விடுத்த அறிக்கையின் அடையாளம்தானும் தமது ஞாபகத்தில் இல்லை என்பதைக் காட்டிவிட்டார்.

எது எப்படி இருந்தபோதிலும் தம்முடைய அரசியல் வாழ்வின் குறிப்பிடத்தக்க விஷயங்களை தாம் விரைவில் மறந்துவிடுவதற்கு தமக்கு உள்ள சலாக்கியங்களில் தமது தொகுதி மக்களும் பங்கு கொண்டாலே என்று அவர் விரும்புவதற்கு காரணம் இருக்கலாம்.

இவ்வாறுகத்தானே மட்டக்களப்புத் தமிழ் பாதுகாப்பு முன்னணியின் உறுப்பினரான பட்டிருப்புப் பிரதிநிதி திரு எஸ். யு. எதிர்மன்னசிங்க(ள)மானார்!

# குமாரி....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகப் பாடினார். குரலில் இனிமை இருந்தாலும் பாடும் முறையில் மாற்றம் கண்டிப்பாகத் தேவை. பாடுவது எப்பொழுதும் ஒரே தன்மையதாக அதாவது Monotonous ஆக இருந்தால் கேட்க அலுப்பாக இருக்கும். பாட்டிலே பாவமும் கம்மியாகவே இருந்தது. உதாரணத்துக்கு ஒன்று. வர்ணத்தின்போது "காதல் மீறுதே" என்ற அடி பாடப்பட்டபோது குமாரி அப்படியே தமது அபிநயத்தில் பாவத்தைக் கொட்டினார். விரகதாபம் வழிந்து ஓடியது. பாட்டில் வெட்டிச் சொற்களாகவே வந்து போயின. "காலைத் தூக்கி நின்று ஆடும் தெய்வமே" என்ற பாடலைப் பொறுத்தவரையிலும் இதே நிலைமைதான்.

நடனப் பாடல்கள் மிக மிகக் கம்பீரமாகப் பாடப்பட வேண்டும். அது நடனத்தைச் சோபிக்க வைப்பதற்கு ஜீவனாக அமையும். அந்தக் கடமையில், பாடியவர் தவறிய போதெல்லாம் வழுவூரார் தாமும் சேர்ந்து குரல் கொடுத்தார். துரதிர்ஷ்டம். அவருடைய குரல் மற்றவருடைய குரலோடு சேரவில்லை. இரண்டும் இருவேறு குரல்களாகவே வந்து காதில் விழுந்தன.

### சிறப்பு அம்சம்

வழுவூரார் நட்டுவாங்கம் செய்ய குமாரி திருக்குமாரசாமி ஆடியதைப் பார்த்தவர்கள் இதற்கு முன் எப்பொழுதும் எங்கும் கண்டிராத அம்சம் ஒன்றையும் அவதானித்திருப்பார்கள். நாட்டியம் ஆடியவர் ஆடினார். பதம் பாடியவர் பாடினார். வாத்தியக் கோஷ்டியினர் முழக்கினர். தாளங்களும் போடப்பட்டன. ஒவ்வொருவரும் மற்றவரைப் பற்றி கவலைப்படாமல் தம் பாட்டில் தத்தமது பங்கைச் செய்தனர். இந்த யந்திர வேலை அதாவது Mechanised Work வழுவூராரைத் தவிர வேறு யாரா ஒழுங்கு செய்தும் சரி வரும் என்று நாம் நினைக்கவில்லை. நாட்டிய கலா கேசரி அல்லவா அவர். அவ்வளவு தூரம் பயிற்சி அளித்திருக்கிறார். குமாரியும் மனம் வைத்துப் பயின்றிருக்கிறார். சபாஷ் குமாரி திருக்குமாரசாமி.


இப்போது உள்ள நிலையில் வழுவூராரின் நட்டுவாங்கம் இல்லாத இடத்து குமாரியால் சமாளிக்க முடியுமா என்பது சந்தேகத்துக்கு இடமாக இருக்கிறது. எல்லாக் கச்சேரிகளுக்கும் வழுவூரார் இலங்கை வர முடியாதாகையால் இன்னொருவரின் நட்டுவாங்கத்திலும் இப்படி அற்புதமாக ஆடக் குமாரி தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

—கே. கே. ஆர்.

சிலோன் தியேட்டர்ஸ் சர்க்கியூட்டில்
ஜூலை மாத வெளியீடு
ஆரம்ப நாளை எதிர்பாருங்கள்!
சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
பத்மினி, எஸ். வரலக்ஷ்மி,
ஓ. ஏ. கே. தேவர், ராகினி
நடிக்கும்
வீரபாண்டிய கட்டபொம்மன்



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
முருகன் (ஜிந்துப்பிட்டி) ராணி (யாழ்ப்பாணம்) ஓடியன் (கல்கிஸ்ஸை)
தினசரி பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்
ஜோதி (திருகோணமலை) லிபர்ட்டி (பதுளை)
மாலை 6-30 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும் காண்பிக்கப்படுகிறது.



பிரசிடென்ட் பஞ்சாட்சரம்
எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், பி. சரோஜாதேவி, டி. ஆர். ராமச்சந்திரன், வி. ஆர். ராஜகோபால் நடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்பதிகழ்ச்சி

மற்றவர்களிடத்துக் கை நீட்டி இரத்தல் இழிவான செயலாகும் என்பதுவே இதற்குப் பொருள்.

எமக்கு வேண்டுவனவற்றையெல்லாம் தந்து உதவுவதற்கு இறைவன் இருக்கிறான். அவனைவிட எம்மைப் பெற்ற தாய் தந்தையர் இருக்கின்றனர் இவர்களிடத்தே வேண்டியதைப் பெற்றுக்கொள்வதை விடுத்து பிறரிடத்தே இரத்தல் கூடாது.

பூரண அன்பில்லாதஇடத்தில் இரந்து திரிதல் அவமரியாதையாகும். கொடைக்கு உரிமையற்றவர்களிடம் வாங்குவது கடனாகும்.

செல்வம் படைத்தவர்களிடம் சென்று மானத்தை மறந்து அவர்களை அண்டிப் பிழைப்பதைக்காட்டிலும் உணவின்றியிருத்தல் மேல். தன்னை இகழ்வார் பின் சென்று வாழும் வாழ்க்கையைக் காட்டிலும் தன் கஷ்ட நிலையில் நின்று உலகறிய இறந்துபோதல் அதைவிட மேல்.

"ஒட்டார்பின் சென்று ஒருவன்
வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல்
நன்று"

—ஏ. ஜீ. ஆனந்தம்




# கல்விச் செல்வம்

— மலர்ச்சி மகள் —

உலகின் கண்ணேயுள்ள செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும்! அறச் செல்வம், பொருட் செல்வமென்பன ஒரு காலத்தில் அழிந்து போகக் கூடியன. ஆயின் கல்விச் செல்வமோ எக் காலமும் அழியும் தன்மை வாய்ந்ததல்ல. ஆகவே கல்விச் செல்வத்தைப் பெற்றவர்கள் எப்பொழுதும் புகழுடனே வாழ்வர். கல்விச் செல்வத்தைப் பெற்ற ஒருவரையும், ஒரு நாட்டின் சக்கரவர்த்தியையும் சீர் தூக்கிப் பார்க்கிறார் ஒரு புலவர். அதைப் படித்துப் பாருங்கள்.

"மன்னனும் மாசறக்
கற்றோனும்சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன்
சிறப்புடையன்-மன்னர்க்கு
தன் தேசமல்லால் சிறப்பில்லை
—கற்றோர்க்கு
சென்ற இடமெல்லாம் சிறப்பு."

ஒரு மன்னனுக்கு தன் நாட்டில் தான் சிறப்பு. ஆனால் கற்றவர்கள் எங்கு சென்றாலும் சிறப்பாகவேயிருக்கும். கற்றோரைக் கண்ட மக்கள் எல்லோரும் காமுறுவர். இது உலகத்தின் நியதி. கல்விக்கிணையான செல்வம் எதுவுமேயில்லை. கல்விக்கிணை கல்விதான். இத்தகைய கல்வியைப் பெற்றவர்கள் எல்லோரும் அக் கல்வியறிவை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து, அவர்களின் அறிவை வளர்த்துத் தங்கள் அறிவையும்வளர்க்க வேண்டும். இதையே தெய்வப் புலவர் வள்ளுவனார்

"தொட்டனைத்தூறும் மணற்
கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு."

என்ற குறலால் விளக்குகிறார். கற்றவர்கள் உலகின் எப்பாகத்திலுள்ள மக்களுடனும் தொடர்பு கொள்ள முடியும். ஆனால் கல்லாதவர்கள் உலக மக்களுடன் தொடர்பு கொள்ள முடியாது. கிணற்றுத் தவளை போல் வாழவேண்டியவராகின்றனர். கல்வியற்ற ஒருவன் கோடீஸ்வரனாக இருந்தாலும் மக்கள் அவனை மதிக்க மாட்டார்கள். கற்ற ஒருவன் குடிசைக்குள் வாழ்ந்தாலும் மக்களின் மதிப்பும் ஆதரவும் அவனுக்குக் கிடைக்கும். ஒருவனுக்குக் கண்கள் எவ்வளவு முக்கியமோ அதேபோல் கல்வியும் அவ்வளவு முக்கியமாகும். கற்றவர்களுக்கு இருக்கும் கண்கள் இரண்டும் தான் உண்மையான கண்களாகும். கல்லாதவர்களுக்கிருக்கும் கண்கள் இரண்டும் கண்களல்ல புண்கள்தாம் எனக் கூறுகிறார் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர்.

"கண்ணுடையரென்பர்
கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

என கல்லாதவர்களின் கண்களைப் புண்களுக்கு உவமையாக்கி மிகவும் இகழ்கிறார். ஆகவே இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியை எல்லோரும் கற்க வேண்டும். கல்லாதவர்களை இகழ்ந்த வள்ளுவர் கற்றவர்களுக்கும் சில புத்திமதிகளைக் கூறுகிறார். கல்வியைக் கற்கும்போது ஐயந்திரிபின்றிக் கற்க வேண்டும். கற்றால் மட்டும் போதாது அதன்படி ஒழுக வேண்டும் எனக் கூறுவதைப் பாருங்கள்.

"கற்கக் கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத்தக."

# வரவில்லையே!

மூளையில் ஏதேதோசிந்தனைகளெல்லாம் முளைத்துக் கொண்டிருந்தன. ஏதாவது எழுதுவோமென்று எழுது கோலைக் கையிலெடுத்து ஏடொன்றைக் கிழித்தெடுத்தேன். ஆனால் பிறகு ஒன்றுமே வரவில்லை. சிந்தனையோட்டம் நின்றுவிட்டது. இதேது பெரிய தொல்லையாய்ப் போச்சு? என்றெண்ணிக்கொண்டு எழுது கோலையும் ஏட்டையும் ஓர்புறம் வைத்துவிட்டு வந்து படுக்கையிற் சரிந்தேன். தூக்கமாகிவிட்டேன். உள்ளம் எங்கேயோ பறந்து சென்றது.

"ஓர் பெரிய கூட்டம். ஒருவர் திருவள்ளுவரைப் பற்றி ஏதேதோ பேசித் தள்ளுகிறார். மக்கள் பேச்சில் மயக்கிக் கையொலி இடுகிறார்கள். கையை இடையே அசைத்து, விரலைச் சுட்டிக் காட்டி வள்ளுவர் ஏன் அப்படிச் சொன்னார் தெரியுமா? என்று பல தடவை கேட்டு விடையும் சொல்லி மேலும் பெருஞ்சத் தமிட்டுப் பொழிந்து தள்ளினார். பின் கூட்டம் கலைந்தது. இரைச்சலுடன் மக்கள் சென்றார்கள். பேச்சாளர் ஒரு சிலருடன் போகிறார். ஒரு அறைக்குள் நுழைந்தனர். மதுப் போத்தலும், இறைச்சிக் கோப்பையுமாய் இருப்பதைப் பார்த்தேன். அட படுபாவி! குறளைத் பற்றிப் பேசியவன் செய்யும் வேலையைப் பாரடா?" என்று சத்தம் போட்டேனோ என்னவோ? கண்ணை விழித்தேன். கண்டது கனவென்ற நினைவு வந்ததும் கண்ணைத் துடைத்துக் கொண்டு மீண்டும் பேனாவை எழுத எடுத்தேன். ஆனால் ஒன்றும் வரவில்லையே?

—"தாமரைத்தீவான்"
மலைவீடு.

# வளர்மதி புதிய மருமக்கள்

2493 ஆர். ரெங்கசாமி, டிக்கோயா.
2494 செல்வி சந்திரிகா திருநாவுக்கரசு, யாழ்ப்பாணம்.
2495 ந. குமாரசாமி, செம்பியன்பற்று.
2496 ஏ. எல். முகம்மது, தங்கதெர—காலி.
2497 பொன். வடிவேல், அடம்பன்.
2498 யோ. பி. செ. நவரெட்னராஜா, முருங்கன் பிட்டி
2499 செல்வி ஞானம்மா சோமனாதர், வாழைச்சேனை
2500 கே செல்வநாதன், கொழும்பு—2
2501 செல்வி அ. புனிதவதி, சுன்னாகம்.
2502 செல்வி திருவேலசனி பொன்னையா, அரியாலை
2503 எம். எஸ். நாகலிங்கம் நாவலப்பிட்டி
2504 எம். ஐ. முகமது, தர்காநகர்
2505 செல்வி எம். எஸ். உம்முஸாலியா, தெலிஜ்ஜிவில
2506 டேவிட் ஜேசுதாசன், குருந்துவத்தை

—:—:—:—

# "சாதி இரண்டொழிய வேறில்லை"

"சாதி இரண்டொழிய வேறில்லை" யென்றார் ஒளவை. ஆனால் மனிதரோ தமக்குள் பல சாதிகளை ஆக்கி தாழ்ந்த சாதியாக மதிக்கப்படுபவர்களை எவ் விசயத்திலும் ஒதுக்கியே வைக்கிறார்கள். இவர்கள் "சாதி யிரண்டொழிய" என்று ஒளவை பாடிய பாடலின்

'நீதிவழுவா நெறி முறையில்
மேதினியில் இட்டார் பெரி
யோர் இடாதார் இழி குலத்
தோர் பட்டாங்கில் உள்ளபடி'

என்னும் பாடலை அறிந்திலார் போலும். நல் நெறி நின்று தருமம் செய்பவர்களே உயர்ந்த சாதி யென்றும் மற்றையோர் தான் தாழ்ந்த சாதி யென்றும் கூறுகிறார் ஒளவை. மனிதருக்குள் சாதி பாகுபாடுகாட்டாது எல்லோரும் ஓரினம் என்னும் கொள்கையைக் கடைப்பிடிப்போமாக.

—செ. மயில்வாகனம்

# குயில் கூவுது!

—நீலா ஆறுமுகம்—

குயில் இருந்து கூவுது
இனிமை யாகக் கூவுது
தனிமை யாக மாம ரத்தில்
இனிமை யாகக் கூவுது

கூட்டில் வாழ்ந்து பழகாமல்
கூக்....கூ என்று கூவுது
கூடு கட்டிப் பழகாமல்
கூக்....கூ என்று கூவுது

காகக் கூட்டில் முட்டை யிட்டுக்
கவலை யின்றி வாழும்
காகம் குஞ்சைக் காத்து வரக்
கவலை இன்றி வாழுது

மாந்த ளிரைக் கோதிக் குயில்
மகிழ்ச்சி பொங்கக் கூவுது
மாந்தர் கேட்டு குயிலைப்போல
கூவி மனம் களிக்கிறார்

# அந்த மாடு....

அன்று சாயந்திரம், எம்மூரின் பிரதான வீதி வழியே "உலாவல்" செய்து கொண்டிருந்தேன், ஆமாம் இப்போது வீதியின் எல்லைக்கு வந்துவிட்டேன். நான் வந்த புறத்திலிருந்து ஒரு பெரிய பஸ் வண்டி—எதிர் புறத்தில் ஒரு மாட்டு வண்டி இழுக்க முடியாசுமையோடு-வீதியோ சிறிது—பாதையை விலகினாலோபடு பாதாளம்-வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். ஏனோ இந்த பாழாய்ப்போன மனம் மற்றோரின் துன்பத்தில்தான் வேடிக்கை காணுகிறது.

மாட்டு வண்டிக்காரன் சிறிது சிறிதாக வண்டியை பாதையின் ஓரத்திற்கு ஓட்டிக்கொண்டிருந்தான். பஸ் வண்டியும் சிறிது சிறிதாக முன்னேறிக்கொண்டிருந்தது. ஆயிற்று சில நிமிடங்[illegible] வண்டி ஓடி ஓர[illegible]டியாக முன்னேறி மாட்டு வண்டியைத் தாண்டியது. மாட்டு வண்டியின் ஒரு புறத்துச் சக்கரமோ...?பாதையினின்றும் அரையடி விலகியிருந்தது. அம்மாடோ...? வண்டி சாய்ந்திருக்கும் பகுதிக்கு பாரம் இழுக்க, அது தன் காலை, வண்டியை, இன்னும் சாயவிடாமல், மிகுந்த பலத்துடன் ஊன்றிக்கொண்டது. வண்டியோட்டுபவனோ அதன் முதுகில் 'சுளீர்' 'சுளீர்' என்று முத்திரை பொறித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வேண்டியது வண்டி பாதையில் நகரத்தானே! ஈவிரக்கமில்லா நெஞ்சம் படைத்த அந்த மனிதன் பிரம்பை யோங்கினான் மாட்டிற்கு சக்தி யிருந்தால்தானே பாதையை விட்டு விலகிய சக்கரத்தை மீண்டும் வீதியில் பொருத்த, அதுதான் வண்டியை இன்னும் சாயவிடாமல் மிகுந்த பலத்துடன் காலை யூன்றிக் கொண்டிருக்கிறதே! ஓங்கிய பிரம்பு மாட்டின் முதுகில் விழுந்து 'சுளீர்' என்ற ஓசையைக் கிளப்பியது. அந்த அடியின் வேகத்தில் அம் மாட்டின் கால்கள் பலம் குன்றின. மறுகணம் அம் மாடு வண்டியுடன், வண்டி பாதையை விட்டு விலகியிருந்த பக்கத்திற்குப் புரண்டது. அந்த இடத்தில் இருந்தவர்கள் நினைத்திருந்தால் அவ் வண்டியை தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால் நினைக்கவில்லையே!! மனிதருக்கு உழைக்கவென்றே பிறந்த அந்த உத்தம ஜீவன், பாதாளத்தில் இன்னும் புரண்டு கொண்டிருந்தது...! உழைத்துழைத்து உருக்குலைந்த அந்த ஜீவனினுடல் கல்லிலும் முள்ளிலும் பட்டு சீர் குலைந்து கொண்டிருந்தது.

அதோ அந்த மாடு சமதரையை அடைந்து விட்டது! மக்கள் கூடினர் அங்கு. ஆனால் அதனிடத்தினில் உயிர் இருந்தால் தானே...! உயிர்தான் அதை யோட்டுபவன் அடிக்கும் போதே பறந்து விட்டதே! அதற்கும் வாயிருந்தால்...சிலவேளை கெஞ்சியிருக்கலாம்! ஈவிரக்கமில்லா, நன்றியுணர்ச்சியில்லா, மாந்தர்கள் வாழும் இப் பொல்லா உலகைவிட்டு பிரியும் நேரம் வந்ததே அதே போதும்" என்று நினைத்துக் கொண்டு தான் அது தன் உயிரை விட்டிருக்க வேண்டும்.

—ஐ. வேலுப்பிள்ளை

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2.

பெயர்........................................

பாடசாலை........................................

விலாசம்........................................

........................................

........................................ ........................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கப் பணியில் தமிழ் மாதர்கள்

கொட்டாஞ்சேனை சென்பெனடிக்ற் கல்லூரியில் சென்ற 11-7-59-ல் நடைபெற்ற குழந்தை இலக்கிய விழாவில் பங்குபற்றிய தமிழ் மாது ஒருவர் கடைசியாகப் பேசி சபையோரை மகிழ்வித்தார் என்பது விழாவில் கலந்து கொண்டோரைனவரும் அறிந்ததே. பல சுவையான சிறு பாடல்களை பண்ணுடன் பாடினர். பாடல்களை இயற்றிய குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவே தாம்பாடிய பாடல்களை இம் மாதரசி வாயிலாகக் கேட்டு மகிழ்ந்தார். இலங்கையின் பல பாகங்களில் சிதறுண்டு கிடக்கும் நாடோடிப் பாடல்கள் பல தேடுவாரற்றுக் கிடக்கின்றன என்றும், இலங்கையில் வழங்கும் பழமொழிகள் பல கட்டுக் கட்டாகச் சேகரித்துக் கறையானுக்கு இரையாகிறதென்றும் கூறினர். அவற்றை அச்சேற்றிப் புத்தகருபமாக வெளியிடுவதற்கு தமிழ்ப் பதிப்பகங்கள் முன்வருவதில்லை எனக் குறைப்பட்டார்.

அன்றுள்ள மாதர் போல் இன்றும் மொழிக்கும், சமயத்துக்கும் புத்துயிர் அளிக்க பல மாதர்குல மாணிக்கங்கள் இலைமறைகாய் போல் தமிழ் நாட்டிலும், ஈழநாட்டிலும் வாழ்ந்துதான் வருகிறார்கள். அவர்கள் தங்களைச் சேவைசெய்பவரென விளம்பரப்படுத்த விரும்புவதில்லை. அப்படிப்பட்ட ஆர்வமும், தமிழ்ப் பற்றுமுள்ள மாதர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ ஆங்காங்கு உள்ளவர்கள் அவர்களை ஆக்கப் பணியில் ஊக்குவிக்குமாறு தமிழ்ப் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்வதாக "தமிழ் விரும்பி" எழுதுகிறார்.

# கழகச் செய்திகள்

### காந்திஜீ சனசமூக நிலையம்

தம்பலகாமம், சிப்பித்திடல் காந்திஜீ சனசமூக நிலையத்தின் ஒன்பதாவது வருடாந்த பொதுக் கூட்டம் சென்ற 12-7-59-ல் கிராம சங்க அக்கிராசனர் தலைமையின்கீழ் நடைபெற்றது.

முதலாவதாக நிலைய அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் வரவு செலவு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டன. நடப்பு வருட நிர்வாகிகளாக கீழ்க் கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: கு. பொன்னுத்துரை, உபதலைவர்: க. அருளம்பலம், கௌரவ செயலாளர்: கா. சித்திரவேல், உபசெயலாளர்: சா. சிவசேகரம், தனாதிகாரி: ஆ. சதாசிவம், நிர்வாக சபை அங்கத்தவர்களாக ச. காளியப்பு, வே. ஏரம்பு, செ. சின்னத்துரை, ச. கோணமலை முதலியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

—

### கண்டி இ. தி. மு. க. பொதுக் கூட்டம்

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் கூட்டமொன்று சென்ற 12-7-59-ல் கண்டிக் கிளை செயலாளர் தோழர். நம்பிக்கை பர்ணந்து தலைமையில் நடந்தது. மற்றும் பொதுச் செயலாளர் ஏ. இளஞ்செழியன், அ. இ. கனகமணி, கி. து. மதியழகன், குணசீலன், கலையன்பன், சுமணன், எஸ். கே. பம்பையன், ஏ. சுந்தரராசன் ஆகியோர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

அன்று காலை 9 மணி முதல் பி. ப. 6 மணிவரை ஏ. இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் பல மணி நேர விவாதத்திற்குப் பின் பல தீர்மானங்கள் நிறைவேறின.

—

### செங்குந்த இந்துக் கல்லூரி

செங்குந்த இந்துக் கல்லூரியில் சென்ற 8-7-59-ல் மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசை வெகு விமரிசையாக நடைபெற்றது. அதில், வித்துவான் மு. சபாரத்தினம் "திருவாசகத் தேன்" என்னும் விடயம்பற்றி அறியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர், "திரு" என்பது ஒருவராலும் அடைய முடியாததொன்று; "தேன்" என்பது எத்தனை நூற்றாண்டு காலம் சென்றாலும் தன் தன்மை குன்றாத ஒரு வஸ்து. அது தன்னைச் சார்ந்த பொருள்களையும் தித்திக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது" என்றும், 'மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய பாடல்களுக்கே "திருவாசகத்தேன்" என்பது பொருந்தும்" என்றும் குறிப்பிட்டார்.

செல்வன். த. தம்பித்துரையின் தலைமையின் கீழ் நடைபெற்ற இக் குரு பூசை, ஆசிரியர் திரு. பொ. இராமசாமியின் நன்றியுரையுடன் இனிது நிறைவேறியது.

—

### வளரும் எழுத்தாளர் சங்கம்

கொழும்பு வளரும் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் பாரதி விழாவை வெகு விமரிசையாக கொண்டாடுவதென அணிமையில் கூடிய மேற்படி சங்கத்தின் நிருவாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாரதி விழாவில் சொற்பொழிவு நிகழ்த்த வண. தனிநாயக அடிகளார், திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம் எம். பி; எஸ். டி. சிவநாயகம், க. ந. வேலன், பண்டிதர் க. சபா—ஆனந்தர் வ. பொன்னம்பலம், திருமதி புதுமைப்பிரியை முதலியோரை அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை வானொலியில் "மாலை மதியம்" நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசாகத் தங்கப் பதக்கம் பெற்ற வளரும் எழுத்தாளர் சங்க உறுப்பினர் செல்வி மங்களாவிற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

—

### இ. தி. மு. க. மார்காஸ் கிளை

மார்காஸ் தோட்ட இ. தி. மு. க. கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் கடந்த 18-7-59-ல் செயற்குழு உறுப்பினர் திரு. என். தங்கமுத்து தலைமையில் கழகப் பணிமனையில் கூடியது. மார்காஸ் கிளையின் விசேஷ அழைப்பின் பேரில் பொதுச் செயலாளர் இரா. அதிமணி, பிரச்சாரக்குழு செயலாளர் அ. ம. அந்தோணிமுத்து, [illegible] ஜே. சோமசுந்தரம், கொழும்பு கிளை துணை செயலாளர் ஏ. எஸ். மணவைத்தம்பி முதலியோர் சமூகமளித்திருந்தனர்.

கூட்ட ஆரம்பத்தில் மறைந்த மூதாட்டி டாக்டர் தருமாம்பாளுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் மார்காஸ் கிளை செயலாளர் திரு. ஆறுமுகம், கழக அமைப்புக் குழு செயலாளர் ஜே. சோமசுந்தரம், பிரச்சாரக் குழு செயலாளர் அ. ம. அந்தோனிமுத்து, கொழும்பு கிளை துணைச் செயலாளர் ஏ. எஸ். மணவைத்தம்பி, உடப்புசல்லாவ தோழர் பி. எஸ். இராமையா, கம்பாயம் தோழர் என். கந்தையா முதலியோர் பேசிய பின்னர் பொதுச் செயலாளர் திரு. இரா. அதிமணி இன்றைய அரசியல் நிலையை தெளிவுபடுத்தி இ. தி. மு. க. வின் கடமையை விளக்கினர்.

பின்னர் கடந்த 11, 12-7-59-ம் நாட்களில் கொழும்பில் கூடிய பொதுக் குழு நிறைவேறிய தீர்மானங்களை மார்காஸ் கிளை ஏகமனதாக ஏற்றுக்கொள்கிறதென்று தீர்மானம் நிறைவேறியது.

—

### மலைநாட்டு மாணவர் மன்றம்

மலைநாட்டு கல்வி, கலாச்சாரம், கலை போன்றவற்றில் அதிக ஊக்கங் காட்டிவரும் மலைநாட்டு கலை மன்றத்தின் சார்பாக மலை நாட்டு மாணவர் மன்றங்களும் அமைக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது. மலை நாட்டு மாணவர் மன்றம் ஒன்றினை கூடிய விரைவில் கம்பளையில் நிறுவ திரு. தமிழ்ப்பித்தன் (ஆசிரியர் "ஈழமணி") ஏற்பாடு செய்துவருகிறார் எனத் தெரிகிறது. மன்றத்தை ஆரம்பித்து வைக்க மலை நாட்டு கலை மன்ற பொதுச் செயலாளர் திரு. பொ. கிருஷ்ணசுவாமி அழைக்கப்படுவார் எனத் தெரிகிறது.

# மூங்கில் திரைக்குப் பின்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

லப் பல பளிங்குப் பாலங்கள் உள்ளன. ஒரே பளிங்காலான வேலைப்பாடமைந்த இரு தூண்களும், பாலக் கரைகளிலுள்ள வேதாளங்கள் (Dragons), சிங்கங்கள் முதலிய பளிங்குச் சிற்பங்களும் அழகுக்கு அழகு செய்கின்றன. 1949ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதலாந் திகதி தியன்-என்-மின்னிலிருந்துதான் மக்கள் சீனக் குடியரசைப் பிரகடனப்படுத்தி, ஐந்து வெள்ளிகளைக்கொண்ட நாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார் மாசே துங்.

### தடுக்கப்பட்ட நகரம்

தியன்-என்-மின்னிலிருந்து சிறிது மேற்கே சென்றதும் சின்-குஆ-மின் (Hsin-Hua-Men) என்ற வாசலுண்டு. இதைக் கடந்து சென்றால் செஞ்சீனத் தலைவர்கள் வாழுமிடத்தை அடையலாம். சுலபமாக யாரும் உள்ளே சென்றுவிட முடியாது! தியன்-என்-மின் வாசலைக் கடந்து உட்சென்றால் "தடுக்கப்பட்ட நகரத்திற்கே" (Forbidden City) வந்து சேருவோம். பழைய மன்னர்கள் மாளிகைகள் பலவற்றைக் கட்டி, அவற்றுள் நடைபெறும் கேளிக்கைகளை வரி கொடுக்கும் மக்கள் பார்க்கக் கூடாது என எண்ணிச் சுற்று மதில்களும் அகழிகளும் கட்டினர்கள். எக்காரணம்கொண்டும் எவரும் உள்ளே செல்லஅனுமதியில்லை. எனவேதான் மன்னர்கள் வசித்து வந்த நகரம் "தடுக்கப்பட்ட நகரம்" எனப் பெயர்பெற்றது.

### பொருட்காட்சி நிலையத்தில்

இன்றோ தொழிலாளர்கள், விவசாயிகள், பொது மக்கள், பலரும் உட்செல்லலாம். மாளிகைகளெல்லாம் இப்பொழுது தொல் பொருட்காட்சி நிலையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அரசர்களின் ஆசை நாயகிகளுக்காகவும் உல்லாசக் கேளிக்கைகளுக்காகவும் கட்டப்பெற்ற பலவகை மாளிகைகளும், மண்டபங்களும், சோலைகளும் பண்டைய சீனரின் சிற்ப நுட்பத் திறனை தெள்ளிதிற் புலப்படுத்தும்.

கன்டன் தொல்பொருட் காட்சி நிலையத்திலுள்ளது போலவே இங்கும், ஒவ்வொரு வரலாற்றுக் காலக் கூறுக்கும் ஒவ்வொரு மாளிகை ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து அணிமையில் அனுப்பப் பெற்ற அன்பளிப்புகளும் அதற்கு நடுவே முதலமைச்சர் பண்டாரநாயகாவின் உருவப் படமும் காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளன!

### மின்னொளியில் விளையாட்டு

பொன்னால் வேயப்பெற்ற பல மாளிகைகளும் இங்கு காணப்படுகின்றன. மாளிகைகளுக்கிடையேயுள்ள சில திறந்த வெளிகள் இப்பொழுது தொழிலாளர் கேளிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. வடபகுதியிலே விளையாட்டு மைதானமொன்றுளது. நாலாயிரம் மக்கள் வசதியாக இருந்து, இரவிலும் மின்னொளியில் கைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் (Basket-Ball) முதலியவற்றைப் பார்ப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### தொழுகை மண்டபங்கள் பெற்றுள்ள மதிப்பு

எழில் மிக்க சோலைகள் பல பீக்கிங்கில் உள்ளன. சுங்சான் சோலை (Chungshan Park) தியன்-என்-மின் அருகேயுள்ளது. பண்டைக் காலத்திலே இங்குள்ள மண்டபமொன்றிலே, வேளாண்மையில் நல்ல அறுவடை கிடைப்பதற்காக வாளாண்மைமிக்க மன்னர்கள் வேள்விகளும், பூசைகளும் செய்தனராம். தொழுகை மாமண்டபமாக இருந்த புனித மாமண்டபம் இன்று சன்-யாட்-சன் நினைவு மண்டபமாக்கப்பட்டு அரசியல் பிரசாரக் கூட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. புனிதத் தொழுகை மண்டபங்களுக்கு இத்தகைய மரியாதைதான் இன்றுள்ள பொதுவுடமையாட்சியால் கொடுக்கப்பட்டுள்ளது! அழகிய மீன்வகைகளைக் கொண்ட தடாகமும், சில செயற்கைக் குன்றுகளும், சிறு அருவிகளும் சோலையை அழகுபடுத்துகின்றன.

(தொடரும்)

# தமது இனத்துக்கே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் காக்க இந்த முயற்சியை எடுத்தாரோ அந்த இனத்துக்கு இவர் இனி உரியராயிருக்கமாட்டார் என்று மட்டும் அன்னார் அறிவது நன்று. இந்த உண்மையைப் பண்டாரநாயக ஆட்சிக் குழுவினர் நன்கறிவர் என்பதற்கையமில்லை,

# துப்பறியும் சிங்கம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ருயே! நீ குற்றமற்றவன்என்றால் ஏன் பயப்படுகிறாய்?" அவர் குரலில் இரக்கம் தொனித்தது. என்ன இருந்தாலும் ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை சேர் போட்டு அவரின் கீழ் வேலை பார்ப்பவனல்லவா? அப்படியான உண்மையான ஊழியன் கிடைப்பது அரிதாச்சே! பேதலிக்கும் மனதுடன் சிங்கத்தைப் பார்த்தார். 'குற்றவாளி யாராயிருந்தாலென்ன? அது நீராகத்தான் இருந்தால் என்ன? குற்றவாளியைக் கண்டுபிடித்து தண்டனை வழங்கச் செய்வது என் கடமை' என்று சிங்கத்தின் கூரிய கண்கள் கூறுவது போல் இருந்தது. இன்ஸ்பெக்டர் 303 ஐ திரும்பிப் பார்த்தார் அவன் அப்படியான பயங்கரமான குற்றம் புரிந்திருக்கமாட்டான் என்று மனதைத் தேற்றிக் கொண்டார்.

303-ன் வீட்டைச்சோதனை செய்த சிங்கம் அவனைக் கைது செய்ய வேண்டியது தான் என்றார்.

"என்னங்க இது?"

"பொலீஸ் இலாகாவிற்கே தீராத அவமானம்" என்றார் என்றுமே கோபித்தறியாத சிங்கம்.

"சேர் சேர் சத்தியமாகச் சொல்கிறேன் 8-மணி போல் வந்து தூங்கினவன் நான். கூப்பிட்ட சத்தம் கேட்டு கண் முழிச்சேன். கதவைத் திறந்து பார்த்தால் நீங்கள்..."

"என்ன 303 எனக்கே கணக்கு விடுகிறாய்? குற்றத்தை நல்ல பிள்ளைபோல் ஒப்புக் கொள்"

"சேர், சேர் என் மானத்தைக் காப்பாற்றுங்க சேர். என்னை விட்டு விடுங்க. எனக்கு ஒண்ணுமே தெரியாது சேர். வேலன் நம்ம மச்சான்தான். மற்றப்படி எனக்கு எதிலும் அவரோடு தொடர்பில்லீங்க சேர்."

மேலும் அவன் சாமர்த்தியத்தைச் சோதிக்க விரும்பாத துப்பறியும் நிபுணர் சிங்கம் "நான் ஒரே ஒரு கேள்வி உன்னைக் கேட்க விரும்புகிறேன். அதற்குத் திருப்திகரமான பதில் கூறினால் உன்னை விட்டுவிடலாம்" என்றார்.

"கேளுங்க சேர், கேளுங்க, ஒன்றல்ல எத்தனை வேணுமானாலும் கேளுங்க சேர்"

சிங்கம் என்ன கேள்வி கேட்கப் போகிறார் என்ற ஆவலில், தம்மையும் அறியாது திறந்த வாயுடன் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார் சில்வா.

"மச்சான் 303 தப்பிவிட்டான். நான்தான் மடத்தனமாய் அகப்பட்டுக் கொண்டேன்" இப்படி சிந்தித்த வண்ணம் நின்றான் வேலன்.

தமது வழக்கமான புன்முறுவலுடன் 303ஐ பார்த்த சிங்கம் "இந்த ஊரில் இரண்டு நாட்களாக மழையில்லை இன்றிரவு 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையில்தான் மழை பெய்திருக்கிறது. அந்த மழைக்கு உன் தொப்பியையும் மழைக் கோட்டையும் பாவித்திருக்கிறாய். நீயோ, 8 மணிக்குப் பின் எங்குமே செல்லவில்லை என்றாய்! என்னப்பா இதெல்லாம்? என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

பதில் ஏதும் கூற முடியாத கான்ஸ்டபிள் 303, இன்ஸ்பெக்டரைப் பார்க்கக் கூட வெட்கப்பட்டு, தலை குனிந்தான்.

வேலனுக்கு என்ன தோன்றிற்றோ தெரிய[illegible] குண்டு வீசியதை [illegible] கேட்காமலே ஒப்புக் கொண்டுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீந்தமிழ் காவியம் திரைப்படமாக காண்பிக்கப்படுகிறது!

சினிமாஸ் திரைகளில் எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் மகத்தான வெளியீடு!

கம்பனின் காவியத்தை கலைப் பொக்கிஷமாக
கண்டு களிக்க அரிய சந்தர்ப்பம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கும்பனித்தெரு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீ கிருஷ்ணா** (திருகோணமலை) **வெம்பிளி** (கண்டி) **மொடர்ன்** (பதுளை)

**விஜிதா** (மஸ்கேலியா) **ஜோதி** (கலகா) **மனோகரா** (யாழ்ப்பாணம்)

ஆகிய திரைகளில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது.

மக்கள் விரும்பும் மகோன்னத திரைச் சித்திரம்!

# சம்பூர்ண ராமாயணம்



**என். டி. ராமராவ்-சிவாஜி கணேசன்-பத்மினி**
**டி. கே. பகவதி- வி.நாகையா-நரசிம்மபாரதி**

ஜி. வரலக்ஷ்மி - புஸ்பவல்லி - ஓ. ஏ. கே. தேவர் - வி. கே, ராமசாமி நடித்துள்ளார்கள்.



கதை வசனம்:
**ஏ. பி. நாகராஜன்**

டைரக்ஷன்:
**கே. சோமு**

தயாரிப்பு:
**எம். வேணு**

பின்னணி: சிதம்பரம் ஜெயராமன், சௌந்தர ராஜன், கண்டசாலா, சீர்காழி கோவிந்தராஜன்.



இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org